நிமிர்வோம்
தடைகளைத் தகர்த்து...

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்
நவம்பர் 2018 / ரூ.20
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
கொளத்தூர் மணி
விடுதலை இராசேந்திரன்

வினியோகப் பொறுப்பு
சூலூர் பன்னீர்செல்வம்

இதழ் வடிவமைப்பு
வெல்கின் கணினி
மா. தேன்ராஜ்

அலுவலக முகவரி
95, டாக்டர் நடேசன் சாலை
அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை 600 004
தொலைபேசி எண்:
044-24980745

அனைத்துத் தொடர்புகளுக்கும்
இரா. உமாபதி
72992 30363

# நடுவண் ஆட்சியின் துரோகங்கள்

தூத்துக்குடி மக்களை கதிர்வீச்சுக்கு உள்ளாக்கி மக்களை நோயாளிகளாக மாற்றிய ‘ஸ்டெர்லைட்’ நிறுவனம் மீண்டும் அதிகாரத் திமிருடன் தூத்துக்குடியில் மக்கள் எதிர்ப்புகளை மதிக்காமல் நுழையத் துடிக்கிறது. 100 நாள் போராட்டத்தின் இறுதியில் காவல்துறையின் துப்பாக்கி சூட்டுக்கு 13 உயிர்களை பலி கொடுத்தனர் தூத்துக்குடி மக்கள். உச்சநீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்து வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் தீர்ப்பை வழங்கிய பார்ப்பன நீதிபதி கோயல் ஓய்வு பெற்ற சில மணி நேரங்களிலே தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தலைவர் ஆனார். முன்னாள் நீதிபதி தருண் அகர்வால் தலைமையில் இந்த ஆலை பற்றிய ஆய்வை நடத்த ஒரு குழுவையும் அமைத்தார். குழுவில் தமிழகத்தைச் சார்ந்த நீதிபதியை இணைத்தால் தூத்துக்குடி மக்களுக்கு ஆதரவான முடிவு வந்துவிடும் என்பதால் அந்தக் கோரிக்கையை நிராகரித்தார். இப்போது தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை திறக்கலாம் என்று அகர்வால் குழு பச்சைக்கொடி காட்டிவிட்டது. தமிழக அரசு ஆலையை மூடி சீல் வைத்து தவறு என்றும் கூறிவிட்டது. சுற்றுச் சூழல் பாதிப்பு இருந்ததாஇல்லையா என்பதை மட்டுமே ஆய்வு செய்ய வேண்டிய குழு அதன் எல்லையை மீறி ஆலையைத் திறக்கலாம் என்று பரிந்துரைள்ளது. ஆய்வுக்குழு அறிக்கையை பாதிக்கப்பட்ட பிரிவினருக்கு தரவேண்டும் என்ற அவசியமில்லை என்றும் பசுமை தீர்ப்பாயைத் தலைவர் நீதிபதி கோயல் கூறிவிட்டார். இந்தப் பரிந்துரைக்கு சட்ட அங்கீகாரம் கிடையாது என்று சட்ட நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆனாலும் தமிழக அரசு சட்டப் பேரவையைக் கூட்டி ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கு ஆதரவான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதே மக்களின் உணர்வு. வேதாந்தா நிறுவனத்தின் நன்கொடைப் பட்டியலில் பா.ஜ.க. இருக்கிறது. எனவே மக்கள் எதிர்ப்பைப் புறந்தள்ளி ஸ்டெர்லைட் ஆலை திறப்புக்கு வழியமைத்து விட்டது நடுவண் ஆட்சி.

காவிரியின் குறுக்கே கருநாடக அரசு கட்டவிருக்கும் மேகதாது அணைக்கு மத்திய நீர் ஆணையம் வழியாக நடுவண் அரசு ஒப்புதல் வழங்கி தமிழக டெல்டா விவசாயிகளுக்கு மற்றொரு துரோகத்தை இழைத்திருக்கிறது நடுவண் ஆட்சி. மத்திய நீர்வளத் துறை அமைச்சராக ரெங்கராஜன் குமாரமங்கலம் இருந்த காலத்தில் மேகதாதுப் பகுதியில் மின்சாரம் எடுக்கும் திட்டத்துக்குத்தான் கருநாடக அரசு அனுமதி கோரியது. இப்போது காவிரி நீரைத் தடுத்துப் பாசனத்துக்கும் பெங்களூர் மற்றும் ராம்நகர் மாவட்ட குடிநீர் திட்டத்துக்குமாக அதை மாற்றியிருக்கிறது.

கஜா புயலால் கடுமையான பாதிப்புக்குள்ளான மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறக் கூட முன்வராத மோடி, தமிழகத்துக்கு அடுத்தடுத்து துரோகங்களை இழைத்துக் கொண்டிருக்கிறார். மக்களின் சீற்றத்துக்கு பதில் சொல்லும் காலம் வந்தே தீரும்!

***பார்ப்பான் ஜாதிப் புத்தியை மாற்றிக் கொள்ள மாட்டான் என்று பார்ப்பன நீதிபதியின் முன்பாகவே முழக்கமிட்ட போராளி!***



# 21 மாதங்கள் சிறை சென்ற ஜாதி ஒழிப்புப் போராளியின் நினைவலைகள்

*25 ஆவது அகவையில் அரசியல் சட்டத்தின் ஜாதியைப் பாதுகாக்கும் பிரிவுகளை எரித்து 21 மாதங்கள் சிறைத் தண்டனை பெற்ற பெரியார் தொண்டர் இடையாற்றுமங்கலம் முத்து செழியன். பெரும் பண்ணையார் குடும்பத்தில் பிறந்தவர். இப்போதும் சொந்த கிராமத்தில் கொள்கை உறுதியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரது வயது 86. சிறையிலிருந்த காலத்திலேயே திருச்சி தேசியக் கல்லூரியில் பட்டப்படிப்புக்கான தேர்வுகளை காவல்துறை பாதுகாப்புடன் எழுதியவர். வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டத்தின் மெய்சிலிர்க்கும் நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார்.*

தஞ்சாவூரில் 1957 நவம்பர் 3இல் நடந்த சாதி ஒழிப்பு ஸ்பெஷல் மாநாட்டில் மிகப் பெரிய ஊர்வலம் நடந்தது. அதில் எம்.ஆர்.ராதா அவர்கள் வெள்ளைக் குதிரையில் வந்தார். அவருக்கு ஜோடியாக திருச்சி வீ.அ. பழனி இன்னொரு குதிரையில் வந்தார். இலட்சக்கணக்கான மக்கள் மாநாட்டில் திரண்டிருந்தார்கள். அப்பொழுதெல்லாம் ஆயிரக்கணக்கில் கூட்டத்தைப் பார்ப்பதே அதிசயம். மாநாட்டில் சாதியை ஒழிப்பதற்காக, சூத்திரப் பட்டம் ஒழிவதற்காக சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டத்தைக் கொளுத்துவோம் என்று பெரியார் அறிவித்தார். கூடியிருந்த இலட்சக் கணக்கான மக்கள் முழு மனதோடு ஆதரித்து விண்ணதிர முழக்கமிட்டனர்.

அப்பொழுது காமராஜர் முதல்வராக இருந்தார். அரசியல் சட்டத்தைக் கொளுத்தினால் என்ன தண்டனை அளிப்பது என்று அதுவரை சட்டத்தில் இல்லை. உடனே போலீஸ் மந்திரியாக இருந்த பக்தவத்சலம் அரசியல் சட்டம் போன்றவற்றிற்கு அவமரியாதை செய்தால் மூன்று ஆண்டுகள்

வரை கடுங்காவல் தண்டனை விதிக்கலாம் என்று புதிய சட்டம் ஒன்றை அவசர அவசரமாகக் கொண்டு வந்தார்.

உங்க வீட்டுச் சோற்றைத் தின்னுவிட்டு இயக்கவேலை செய்ய வாருங்கள், ஓய்வு நேரத்தில் வாருங்கள் என்றுதான் பெரியார் மக்களை அழைப்பார். பக்தவத்சலம் புதுச்சட்டம் கொண்டு வந்தவுடன், நீங்கள் இந்தச் சட்டத்தைப் பார்த்து பயந்துவிட மாட்டீர்கள், அதுபோல மற்றவர்களும் இதைப் பார்த்து பயந்து கொள்ளும்படி நீங்கள் நடந்து கொள்ளாதீர்கள் என்று பெரியார் அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கை மிகப் பெரிய சவாலாக, அழைப்பாக அமைந்துவிட்டது. வாய்ப்பிருந்தால் போராட்டத்திற்கு வரலாம் என்று நினைத்திருந்தவர்களும், வீட்டில் வேலையிருந்தவர்களும் அதையெல்லாம் மறந்துவிட்டு சட்டத்தை எரிக்க வீதிக்கு வந்தனர். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தோழர்கள் பயமற்ற தன்மையில் போராட்டத்தில் கலந்து கொண்டு அரசியல் சட்டத்தை எரித்தார்கள். இதற்கு பெரியாரின் அந்த அறிவிப்பே முக்கிய காரணமாக இருந்தது.

சட்ட எரிப்புப் போராட்டத்தில் வயது வித்தியாசம் இல்லாமல், உடல்நிலையைப் பற்றியோ, பொருளாதாரத்தைப் பற்றியோ, எதிர்காலத்தைப் பற்றியோ எந்தவிதமான கவலையும் இல்லாமல் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் அரசியல் சட்டத்தைக் கொளுத்தியது வியக்கத் தக்கது. காவல் துறையினர் சட்டத்தை எரித்த எல்லோரையும் கைது செய்யாமல் நான்காயிரம் பேரை மட்டும் கைது செய்தனர்.

இடையாற்றுமங்கலத்தில் நாங்கள் இ.ச. தேவசகாயம், முத்துசெழியன், மா.வேலு, அ.சுயம்புராஜ், யா. சூசை, மை. ஜெகநாதன், ம. அருள்தாஸ், அ. மோசஸ், அ. சவரிமுத்து, ஆ. அருளானந்தம், மா. சுப்பிரமணியன், வே. துரைராஜ், பு. அய்யனார், ரா. ராயப்பன், மு. நாகமுத்து, அ. அம்மாசி, சூ. மதலைமுத்து, செ. நாகராஜ், பே. மாவடியான், மா. தங்கையன், ப. மாரிமுத்து, ப. கலியபெருமாள், சவரிமுத்து, லெ. மாவடியான், வே. காசியம்மாள்வேலு, த. முத்தம்மாள், வே. தெய்வானை ஆகிய 27 பேர் சட்டத்தைக் கொளுத்தினோம்.

**ஏழு பேர், ஒன்பது பேர் என்று எங்களை அடைத்திருந்த அந்த அறையில் ஒரேயொரு தண்ணீர்ப் பானையும் ஒரேயொரு மூத்திரப் பானையும் இருக்கும்.**

சிறையில் இருந்து விடுதலையான சில நாட்களில் தோழர்கள் நாகமுத்துவும், வே. தெய்வானையம்மாளும் சிறை தந்த நோய்க்குப் பலியானர்கள்.

எங்களைக் கைது செய்த போலீஸார் நீங்கள் லால்குடி காவல் நிலையத்திற்கு வந்து விடுங்கள் என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்கள். காலை 10 மணிக்கு தபால் நிலையத்திற்கு அருகில் சட்டத்தைக் கொளுத்திய நாங்கள் மதியம் வீட்டில் உணவு சாப்பிட்டுவிட்டு மாலையில்தான் லால்குடி காவல் நிலையத்திற்குச் சென்றோம்.

மேலவாளாடித் தோழர்கள் மண்ணச்ச நல்லூரில் சட்டத்தை எரித்துவிட்டு ஊருக்குத் திரும்பி விட்டனர். அவர்களை காவல்துறை கைது செய்யவில்லை.

இதுபோலத்தான் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதியிலும் நடைபெற்றுள்ளது. சட்டத்தைக் கொளுத்தியவர்கள் அனைவரையும் உடனுக்குடன் கைது செய்திருந்தால் இன்னும் பல்லாயிரக்கணக்கானவர்களை கைது செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். ஏனென்றால் அன்றைய தினம் மக்கள் பெருந்திரளாகத் திரண்டு சட்டத்தைக் கொளுத்துவதில் பேரார்வம் காட்டினார்கள்.

திருச்சி, தஞ்சை மாவட்டங்கள் கழகத்தின் வலுவான மாவட்டங்கள் என்பதால் இந்த மாவட்டங்களில் மட்டும் சட்டத்தை எரித்தவர்கள் எண்ணிக்கை 2000 பேருக்கு மேல். நவம்பர் மாதம் 27, 28 தேதிகளில் எங்களை திருச்சி சிறையில் அடைத்தார்கள். அங்கு எங்கு பார்த்தாலும் கருப்புச் சட்டைதான். தோழர் களின் கூட்டம் பார்ப்பதற்கு கடல் மாதிரி காட்சியளித்தது.

**எங்களைக் கைது செய்த போலீஸார் நீங்கள் லால்குடி காவல் நிலையத்திற்கு வந்து விடுங்கள் என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்கள். காலை 10 மணிக்கு தபால் நிலையத்திற்கு அருகில் சட்டத்தைக் கொளுத்திய நாங்கள் மதியம் வீட்டில் உணவு சாப்பிட்டுவிட்டு மாலையில்தான் லால்குடி காவல் நிலையத்திற்குச் சென்றோம்.**

எல்லோரையும் 15 நாள் ரிமாண்ட் செய்திருந்தனர். விசாரணை ஒரு மாதம் வரையில் நடந்தது. விசாரணை முடிந்து டிசம்பர் மாதம் 24ஆம் தேதிக்கு மேல் தண்டனை கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். எங்களுக்கு 30ஆம் தேதி தண்டனை கொடுத்தார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், சென்னை, திருவண்ணாமலை போன்ற பகுதிகளில் ஆறு மாதம், மூன்று மாதம், ஒரு மாதம் என்று தண்டனை கொடுத்தார்கள். ஆனால் திருச்சி கோர்ட்டில் வேணுகோபாலாச்சாரி என்கிற நீதிபதி, திருச்சி நகரத் தோழர்களுக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனையும், லால்குடித் தோழர் களுக்கு ஒன்றரை ஆண்டு, இரண்டாண்டு கடுங்காவல் தண்டனையும் வழங்கினார். லால்குடிப் பகுதியில் திராவிடர் விவசாயத் தொழிலாளர் கழகத்தினர் கடுமையாக பணியாற்றியதால் பார்ப்பன மிராசுதாரர்கள் மிகவும் கஷ்டப்பட்டதாக அந்த மாஜிஸ்திரேட்டிடம்சொல்லியிருக்கிறார்கள். அதன் காரணமாக எங்களுக்கு மட்டும் அதிக தண்டனை வழங்கப்பட்டது.

திருச்சி சிறையில் மொத்தக் கொள்ளளவே இரண்டாயிரம் பேர்தான். ஏற்கனவே அங்கு இரண்டாயிரம் கைதிகள் இருந்தனர். கருப்புச் சட்டைத் தோழர்கள் இரண்டாயிரத்திற்கு மேல் புதிதாக வந்து சேர்ந்தோம். சிறையே நிரம்பி வழிந்தது. ஒருவர் இருக்கக்கூடிய அறையில் 7 பேர், 9 பேர் என்று எங்களை அடைத்திருந்தனர். நாங்கள் இருக்கும்போது ஓடு போட்ட கட்டிடங்கள்தான் இருந்தது. அதற்கு கேம்ப் ஜெயில் என்று பெயர். இது 1957ஆம்ஆண்டில்.

ஏழு பேர், ஒன்பது பேர் என்று எங்களை அடைத்திருந்த அந்த அறையில் ஒரேயொரு தண்ணீர்ப் பானையும் ஒரேயொரு மூத்திரப் பானையும் இருக்கும். நாங்கள் எங்கள் ரூமில் காலையும் தலையையும் மாற்றி மாற்றி வைத்துப் படுத்துக் கொள்வோம். ஏனென்றால் ஒரே மாதிரி படுத்தால் இடம் போதாது, வசதி போதாது. காலையில் அய்ந்தே முக்கால் மணிக்கு விசிலடிப்பார்கள். உடனே நான்கு, நான்கு பேராக பைல் உட்கார வேண்டும். கணக்குகளைச் சரிபார்த்துவிட்டு மீண்டும் அறையில் வைத்து பூட்டி விடுவார்கள். எல்லோருடைய கணக்கு களையும் முடித்து விட்டுத்தான் எங்களை வெளியில் விடுவார்கள். மாலை 6 மணிக்கு மேல் அறைக்குள் வைத்துப் பூட்டி விடுவார்கள். பாட்டுப் பாடத் தெரிந்தவர் பாட்டுப் பாடுவார், பேசத் தெரிந்தவன் பேசுவார். இப்படியே இரவு போய்விடும்.

அப்போது மதுவிலக்கு அமுலில் இருந்த நேரம். அதனால் அப்போது சிறையிலிருந்தவர் களில் ஆயிரம் பேருக்குமேல் சாராயம் காய்ச்சி யவன், சாராயம் குடித்தவன்தான். காவல் துறையினர் அவர்களை நாயை விரட்டுவது போல் விரட்டி வேலை வாங்குவார்கள்.

முப்பது நாட்களில் ஜெயிலே திணறிப் போனது. வாய்தாவிற்கு எங்களை கோர்ட்டுக்கு கூட்டிக் கொண்டு போக லாரி வரும். 100 பேர் ஏறக்கூடிய லாரியில் 150, 200 பேரை ஏற்றிக் கொண்டு போய் கோர்ட்டில் இறக்கி விடுவார்கள். காபி, டீ சாப்பிடப் போனவர்கள் லாரி கிளம்புவதற்குள் வர முடியாமல் தாமதமானால் திமுதிமுவென ஜெயிலுக்கு ஓடி வருவார்கள். ஒரு கைதியை கோர்ட்டுக்குக் கூட்டிப் போகும்போது விலங்கு போட்டு கூட்டிப் போனாலே அவனை திரும்ப அழைத்து வருவது மிகவும் சிரமமாக இருக்கும். ஆனால் இவர்கள் மட்டும் மாமியார் வீட்டிற்குப் போவதுபோல ஜாலியாகப் போகிறார்கள். ஜாலியாக வருகிறார்கள் என்று சிறை அதிகாரிகள் வேடிக்கையாகப் பேசிக் கொள்வார்கள். நம்முடைய தோழர்கள் அதை சிறையாகவே கருதவில்லை என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

எங்களோடு நாகராஜ், மாவடியான் என்கிற சிறுவர்கள் சிறையிலிருந்தவர்கள். அதில் நாகராஜ் என்பவர் ஒன்றே முக்கால் ஆண்டுகள் சிறையிலிருந்தார்.

எனக்கு தீர்ப்பு சொல்லப்பட்ட நாளன்று வக்கீல் மூலம் என் தந்தையார் ஒரு மனு கொடுத்திருந்தார். அந்த மனுவில், நான் பி.ஏ. படித்திருக்கிறேன், இந்து மதத்தைச் சார்ந்தவன், உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று வக்கீல் எழுதியிருக்கிறார். எனக்குத் தண்டனை வழங்கப்பட்ட பிறகு, மாஜிஸ்திரேட் தனது அறைக்கு என்னை அழைத்தார். நான் சென்று மாஜிஸ்திரேட்டைப் பார்த்தபோது, நீங்கள் சாதி, மதம் ஒழியணும் என்று பேசுகிறீர்கள். ஆனால் உங்கள் மனுவில் இந்துமதம் என்று தானே போட்டிருக்கிறீர்கள் என்று என்னைக் கேட்டார். உடனே நான், இது ரொம்பத் தப்புங்க! நான் இதைக் கேட்கவில்லை. நான் சிறையிலிருந்து வருகிறேன் என்பது உங்களுக்கே தெரியும். இந்த மனுவைப் போட்டது எங்கப்பா, இருந்தாலும் இது தப்புங்க! அதோடு எனக்குக் கொடுக்கிற பி கிளாஸ் வசதியை இரத்து செய்து விடுங்கள் என்றேன்.

பார்ப்பானைப் பற்றி மட்டும் குறை சொல்கிறீர்கள். பார்ப்பனரில் எவ்வளவு ஏழைகள் இருக்கிறார்கள் தெரியுமா? என்று மாஜிஸ்திரேட் கேட்டார். இதில் ஏழை, பணக்காரன் பிரச்சினை எல்லாம் இல்லீங்க! அவர்களுடைய திமிர் புத்தியைப் பற்றித்தான் பேசுகிறோம் என்றேன். என்ன திமிர் புத்தி என்று திருப்பி கேள்வி கேட்டார். எனக்கு கோபம் வந்துவிட்டது. சட்டத்தை எரித்தவர்களை மூன்று ஆண்டு வரை தண்டிக்கலாம் என்று சட்டம் இருக்கிறது. ஆனால், மற்ற எல்லா மாவட்டத்திலும் ஒரு மாதம், மூன்று மாதம், ஆறு மாதம் என்று தண்டித்திருக்கிறார்கள். நீங்கள் மட்டும் ஒன்றே முக்கால் வருஷம் தண்டித்திருக்கிறீர்கள். இதைப் பார்க்கும்போது டி.எம். நாயர் சொன்னது சரியென்று எனக்குத் தோன்றுகிறது என்று சொன்னேன். என்ன சொன்னார் நாயர் என்று கேட்டார் மாஜிஸ்திரேட். ஒரு நீக்ரோ தன் நிறத்தைக்கூட மாற்றிக் கொள்ளக் கூடும். சிறுத்தை தன் புள்ளியைக்கூட மாற்றிக் கொள்ளக் கூடும். ஆனால், ஒரு பார்ப்பான் தன் சாதிப் புத்தியை மாற்றிக் கொள்ளவே மாடடான் என்று நாயர் சொன்னதைச் சொன்னேன். இப்படி மாஜிஸ்திரேட்டுக்கும் எனக்கும் வாக்குவாதம் நடந்தது. பிறகு என்னை சிறைக்கு கொண்டு சென்றார்கள்.

சிறையிடைக்கப்பட்ட ஆறு மாதத்திற்குப் பின்னால் நான் பரோலில் வெளியே வந்தேன். அப்போது நமது தோழர் ஒருவர் இந்து ஆங்கிலப் பேப்பரை என்னிடம் காட்டினார். அதில் சாதியை ஒழிக்கச் சட்டம் எரித்தோம் என்பவர்களைப் பார்த்து, சாதி, மதத்தை ஒழிப்போம் என்ற நீங்கள் மனுவில் இந்துமதம் என்று மதத்தைக் குறிப்பிடலாமா? என்று நீதிமன்றத்தில் நீதிபதி கேட்டார். அவர்களால் எந்த பதிலும் சொல்ல முடியவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் என்னைக் குறிப்பிட்டு எழுதியிருந்தார்கள். நீதிபதி அவர் அறையில் என்னிடம் பேசியதையும் அதற்கு நான் அளித்த விளக்கத்தையும் மறைத்து சாதி ஒழிப்புப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையில் உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டிருந்தார்கள். அன்று கோர்ட்டில் நடந்தவை எல்லாம் அய்யாவிற்கு நன்றாகத் தெரியும். நான் அந்த இந்துப் பேப்பரை எடுத்துக் கொண்டு சென்று அய்யாவிடம் காட்டி, இந்து பேப்பர் மேல் வழக்குப் போடப் போகிறேன் என்றேன். இந்து பேப்பரில் என் பெயரே போட மாட்டான், உன்னை செழியன் என்று போட்டிருக்கிறான். அதோடு விட்டுவிட்டுப் போவியா? அதை விட்டுவிட்டு கேஸ் போடுறீயா? அதெல்லாம் வேண்டாம் என்றார் பெரியார். அதை அப்படியே விட்டு விட்டேன்.

தண்டனை அறிவிக்கப்பட்ட அன்றே திருச்சி வீ.அ. பழனி, டி.டி.வீரப்பா, தேவசகாயம் போன்றவர்களை கோயமுத்தூர் சிறைக்கு அனுப்பி விட்டார்கள். பிரான்சிஸ், ஆனை முத்து, என்னைப் போன்றவர்களையெல்லாம் வேலூர் சிறைக்கு மாற்றி விட்டார்கள். கோர்ட்டிலிருந்து நாங்கள் வந்ததும் இன்று இரவே எங்களை வேலூருக்குப் புறப்பட வைத்தார்கள். முப்பது நாட்கள் பழகியிருந்த சிறையை விட்டு பிரிவதற்கு எங்களுக்கு வருத்தமாக இருந்தது.

திருச்சி சிறையிலிருந்து எங்களை அழைத்து வந்து தூத்துக்குடி எக்ஸ்பிரசில் ஏற்றி இரவு ஒரு மணிக்கு விழுப்புரத்தில்



*இடையாற்றுமங்கல சட்ட எரிப்புப் போராளிகள் பெரியாருடன் எடுத்த படம். பெரியாருக்கு இடது பக்கத்தில் அமர்ந்திருப்பர் முத்து. செழியன்*

இறக்கினார்கள். அங்கிருந்து அடுத்த நாள் காலை 11 மணிக்குத்தான் வேலூருக்குச் செல்லும் இரயில் புறப்படும். அதுவரைக்கும் விழுப்புரம் இரயில் நிலையத்திலேயே இருந்தோம். நாங்கள் விழுப்புரத்திலிருக்கிற செய்தியறிந்த கேபின் மாஸ்டர் இராகவானந்தம் (எம்.ஜி.ஆர். ஆட்சியில் அமைச்சராக இருந்தவர். அவர் திருச்சியில் இருந்தபோதே 1952-லிருந்தே எனக்கு நல்ல பழக்கம்) இரவே வந்து எங்களைப் பார்த்து நலம் விசாரித்து விட்டுப் போனார். காலையில் 7 மணிக்கு நான், பிரான்சிஸ், ஆனைமுத்து ஆகியோர் இரயில் நிலையத்திலிருந்து கிளம்பிப் போய் அங்கிருந்த பெரியார் தொண்டர் டாக்டர் தியாகராஜன் அவர்களுடன் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அவர் எங்களுக்கு காலை டிபன் வாங்கி கொடுத்தார். பிறகு இரயில் நிலையம் வந்து 11 மணிக்கு இரயிலேறி வேலூர் போய்ச் சேர்ந்தோம்.

வேலூர் சிறை திருச்சி சிறையைவிட நன்றாக இருந்தது. அங்கு கூட்டமும் குறைவு. அங்கிருந்த மூன்று மாதமும் பி. கிளாஸ் வகுப்பு கொடுத்திருந்தார்கள். துணைக்கு ஆட்கள் இல்லை. திருச்சியில் பல தோழர்களோடு கலந்து பழகுகிற வாய்ப்புக் கிடைத்தது.

ஆனைமலை ஏ.என். நரசிம்மன், பி.ஏ. படித்தவர். அய்யாவோட உறவினர். உலகத்திலேயே ரொம்ப மரியாதை தெரிந்தவர். அடக்கமாகவே கடைசி வரை வாழ்ந்தவர். கழகக் கட்டுப்பாடு, ஆர்ப்பாட்டமின்மை என அனைத்திற்கும் சிறந்த, உயர்ந்த அடையாளமாகவே இருந்தவர். அவரையும் வேலூருக்கு மாற்றியிருந்தார்கள். அவர் சிறை உணவைத் தவிர வேறெந்த உணவையும் சாப்பிட மாட்டார். இயக்கத்தில் அய்யாவிற்கு அடுத்த நிலையிலிருந்த பெரியவர் வேலூர் திருநாவுக்கரசு எங்களை அடிக்கடி சிறையில் வந்து பார்த்து ஆறுதல் சொன்னார்கள். பழங்கள் வாங்கிக் கொடுத்தார்கள். என்னைவிட எத்தனையோ மடங்கு பெரியவர்கள் எங்களை சிறையில் வந்து பார்த்தார்கள்.

பி.ஏ. படிப்பில் தேர்வை நான் எழுத வேண்டியிருந்ததால், தேர்வெழுத அனுமதி

வேண்டும் என்று மனுக் கொடுத்தேன். அதற்கு பரோல் கிடைக்குமென்று எதிர்பார்த்தேன், கிடைக்கவில்லை. ஆனால் என்னை திருச்சி சிறைக்கு மாற்றி, அங்கிருந்து காவலரின் கண்காணிப்போடு திருச்சி தேசியக் கல்லூரியில் தேர்வெழுத அனுமதித்தார்கள். எனக்கென்று ஒரு வேன், அதில் நான்கு போலீஸார் பாதுகாப்பு வருவார்கள். கல்லூரிக்குள் நான் தேர்வெழுதச் சென்றவுடன் போலீஸார் வாசலில் நின்று காவலிருப்பார்கள். தேர்வெழுதி முடித்ததும் மாலையில் சிறைக்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள். திரும்பவும் அடுத்த நாளும் இதே வேலை தொடரும். இப்படியே அய்ந்து நாட்கள் காலையில் வந்து தேர்வெழுதிவிட்டு மாலையில் சிறைக்குச் சென்று கொண் டிருந்தேன். அன்றைய நாட்களில் இந்தச் செய்தி திருச்சி முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்டது. எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. ஏனென்றால், நான் ஒரு சாதாரண ஆள், ஜமால் முகமது கல்லூரியில் இண்டர்மீடியட் படிக்கிற போது, இதே தேசியக் கல்லூரி வாசலில் இந்தியை எதிர்த்து பல மறியல்கள் செய்திருக்கிறேன். அப்போது போலீஸ்காரர்கள் என்னைத் தூக்கி லாரியில் பொத்தென்று வீசியிருக்கிறார்கள். அதே கல்லூரியில் போலீஸாரின் பலத்த பாது காப்போடு தேர்வெழுதும் நிலை ஏற்பட்டது எனக்கு வித்தியாசமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்ததில் வியப்பில்லை.

தேர்வெழுதுவதற்குக் கேட்ட பரோல் லீவு, தேர்வெழுதி முடித்ததிற்குப் பிறகு பதினைந்து நாட்கள் கழித்து எனக்குக் கிடைத்தது. ஒரு மாதம் பரோல் கொடுத்தார்கள். பரோல் கொடுத்தால் வெளியே போய்த்தான் தீர வேண்டும். பரோலில் நான் வெளியே இருந் தபோது அய்யா சிறையிலிருந்து விடுதலை யானார். அன்று சென்னைக் கடற்கரையில் நடந்த பொதுக் கூட்டத்திற்கு நான் போயிருந்தேன்.

நமது தோழர்கள் சிறைக்கு வந்து ஆறுமாதங்களாகிவிட்டது. சிறை அதிகாரி களிடம் நமது தோழர்கள் மீது மிகுந்த மரியாதை ஏற்பட்டிருந்தது. சிறையைப் பொறுத்தவரை அவர்கள் கொடுக்கிற உணவு வெந்ததோ, வேகாததோ அதை கைநீட்டி தட்டில் வாங்கிக் கொள்ள வேண்டும், மறுக்கக் கூடாது.

**நேரு பேசிய கூட்டத்தில் சோ. சுப்பிரமணியம் என்கிற மாஜிஸ்திரேட்டும் கலந்து கொண்டார். போராட்டத்தில் கலந்து கொண்டவர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று மாஜிஸ்திரேட்டை வைத்துக் கொண்டே பேசினார்.**

கஞ்சிதான் கொடுத்தார்கள். அது எப்படி இருக்கிறதோ மறுக்காமல் வாங்கிக் கொள்ள வேண்டும். நமது தோழர்கள் சிறை விதிகளுக்கேற்ப நடந்து கொண்டதே சிறை அதிகாரிகளின் எண்ணத்திற்குக் காரணம். அவர்கள் கொடுப்பதில் மோர் மட்டும்தான் ஓரளவிற்கு நன்றாக இருக்கும். என்னைப் பொறுத்தவரை நான் சோற்றை வாங்கி தண்ணீரில் ஊறப்போட்டு விடுவேன். திருச்சிச் சிறையில் கொடுத்த உணவில் புழு, பூச்சிகள் இருக்கும். புழு, பூச்சிகளை எடுத்து வெளியே போட்டுவிட்டு சோற்றைத் தண்ணீரில் ஊற வைத்து காலையில் கிடைக்கும் மோரில் கரைத்து சாப்பிட்டு விடுவோம்.

தேர்வு எழுதிக் கொண்டிருந்த காலகட்டத்தில் சிறையில் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போய் விட்டது. சிறை டாக்டர் எனக்கு ஊசி போட்டபோது நான் மயக்கமாகி விட்டேன். நான் இறந்து விட்டதாக எண்ணி உடனே ஜெயில் கதவை மூடி விட்டார்கள். பிறகு வேறொரு டாக்டர் வந்து பார்த்து மற்றொரு ஊசி போட்டு மயக்கம் தெளிவித்தார். சாவிற்கு அருகில் சென்று திரும்பி விட்டேன். என்ன காரணம் என்று கேட்டபோது, நல்லா சாப்பிட்டீர்களா? என்று கேட்டார்கள். நன்றாகச் சாப்பிட்டு இரண்டு நாளாகிறது என்றேன். அதுதான் வெறும் வயிற்றில் ஊசி போட்டதால் இப்படி ஏற்பட்டது என்று சொன்னார்கள்.

நாங்கள் கேம்ப் ஜெயிலில் இருந்தபோது அங்கு ஓட்டுக் கட்டிடங்கள்தான் இருக்கும் காம்பௌண்ட் சுவர் கிடையாது. 1986இல் மீண்டும் நான் திருச்சி சிறையில் அடைக்கப்பட்டபோது சிறிய அளவில் காம்பௌண்ட் சுவர் கட்டியிருந்தார்கள். சிறைக்

கட்டிடங்கள் மாடிகளாக மாறி ஹாஸ்டல் போல இருந்தது. நவீன கழிப்பிடங்கள்கூடக் கட்டியிருந்தனர். 2012இல் சிறீரங்கம் பிராமணாள் கபே ஓட்டல் பெயர் அழிப்புப் போராட்டத்தில் சிறை சென்ற தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் மற்றும் தோழர்கள் விடுதலையானபோது வரவேற்கச் சென்றேன். அப்போது பார்த்தால் வெளியிலேயே பெரிய காம்பௌண்ட் சுவர் கட்டியிருந்தார்கள். காங்கிரஸ்காரர்கள் காலத்தில் வேலியாக இருந்தது. தி.மு.க., அ.தி.மு.க. காலத்தில் காம்பௌண்ட் சுவராக மாறிவிட்டது. அப்போது காலையில் கஞ்சி கொடுப்பார்கள். இப்போது காலையில் சப்பாத்தி, இட்லி கொடுக்கிறார்கள். எவ்வளவோ மாறுதல்கள் செய்து விட்டார்கள்.

எங்கள் காலத்தில் சிறைக் கொடுமை சொல்ல முடியாத கொடுமை. காலையில் கஞ்சி, மத்தியானம் பட்டைச் சோறு, சாம்பார், ஒரு காய், மோர், இரவு கஞ்சி, பட்டைச் சோறு கொடுப்பார்கள். திருச்சியில் கொடுக்கும் சோற்றில் தண்ணீரை ஊற்றினால் சோறு மிதக்கும். புழு கீழே இருக்கும். கோயமுத்தூர் சிறையில் சோறு நன்றாக இருந்தது. நன்றாக இருந்தது என்றால் ஒசத்தியான உணவல்ல. திருச்சியைப் போல அவ்வளவு மட்டமாக இருக்காது. வேலூரிலும் கோயமுத்தூரைப் போலவே இருந்தது.

திருச்சி சிறையிலிருக்கும்போது ஒருமுறை ஆனைமுத்து மற்றும் நாங்களெல்லாம் உண்ணாவிரதம் இருந்தோம். பிறகு அதிகாரிகள் வந்து பேச்சுவார்த்தை நடத்தியதால் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டோம். ஏழு வேளை உணவை உண்ண மறுத்து போராட்டம் செய்தோம்.

திருச்சி சிறைக்கு என்னை மாற்றியபோது பி கிளாஸ் கொடுப்பதாகச் சொன்னார்கள். எனக்கு பி கிளாஸ் வேண்டாம், நான் எங்கள் தோழர்களோடே இருக்கிறேன் என்று கூறிவிட்டேன். சில சமயங்களில் அங்கிருந்த ஓட்டு வீடுகளின்மீது பாம்புகள் வந்துவிடும். அது எங்களைப் பார்த்து ஒதுங்கிப் போனது. நாங்கள் அதைப் பார்த்து ஒதுங்கிப் போனோம். அங்குதான் சிலம்பாட்டம், மான்கொம்பு விளையாடக் கற்றுக் கொண்டோம். அங்கேயே நாடகங்கள் நடத்தினோம். சிறை அதிகாரிகளும் நாங்களும் சண்டை போடாமல் உறவு மனப்பான்மையை வளர்த்துக் கொண்டதால் அவர்களால் எங்களுக்கு எந்தத் தொல்லையும் வரவில்லை. அதிகாரிகள் நமது தோழர்களைத் திட்டியதில்லை, அவர்கள் திட்டுமாறு நாங்களும் நடந்து கொண்டதில்லை.

**நீதிமன்றம் கொண்டு வரப்பட்ட பெரியார் தொண்டர்கள் காவல்துறை வாகனங்களைத் தவறவிட்டபோது தாமாகவே சிறைக்குள் வந்ததை அதிகாரிகள் வியப்புடன் பார்த்தனர்.**

இந்த சமயத்தில் தமிழ்நாட்டிற்கு வந்த பிரதமர் நேரு, அரசியல் சட்டம் பிடிக்காது என்று சொல்லுபவர்கள் நாட்டைத் துண்டாட நினைக்கிறார்கள். இவர்கள் நாட்டைவிட்டு வெளியேறட்டும் நான்சென்ஸ் என்றும், இவர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்றும் பேசினார். அதற்கு பெரியார், நாங்கள் இந்த நாட்டின் சொந்தக் காரர்கள், நாங்கள் எதற்கு இந்த நாட்டை விட்டுப் போக வேண்டும். நீங்கள் வேண்டுமானால் நாட்டை விட்டு வெளியேறுங்கள் என்று பதில் சொன்னார். நேருவின் பேச்சைக் கண்டித்து தி.மு.க.வினர்கூட கருப்புக்கொடி காட்டினார்கள்.

நேரு பேசிய கூட்டத்தில் அரசு வழக்கறிஞர்கள் மாஜிஸ்திரேட்டும் கலந்து கொண்டார். நேர்மையானவர் என்று சொல்லப்பட்ட நேரு, நாத்திகவாதி என்று சொல்லப்பட்ட நேரு, சோசலிசவாதி என்று சொல்லப்பட்ட நேரு சட்ட எரிப்பு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் போராட்டத்தில் கலந்துக் கொண்டவர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று மாஜிஸ்திரேட்டை வைத்துக் கொண்டே பேசினார். சொல்லக்கூடாத ஒன்றை நேரு சொன்னார். அதன் விளைவாக நீதிபதி பெரியாருக்கு ஆறுமாத தண்டனை விதித்தார்.

1957இல் முதுகுளத்தூரில் தாழ்த்தப்பட்ட

மக்களைக் கொன்றும் அவர்களின் குடிசைகளைக் கொளுத்தியும் பெரிய கலவரம் நடந்தது. அப்போது இந்தக் கலவரத்திற்கு மூலகாரணமாக இருந்த முத்து ராமலிங்கத்தேவரை முதலில் கைது செய்யுங்கள், ஆனது ஆகட்டும் என்று முதல்வர் காமராஜரை பெரியார் வற்புறுத்தினார். வெளிப்படையாக அறிக்கை யாகவும், பொதுக் கூட்டத்திலும் இதை அய்யா மிகவும் வலியுறுத்தினார். முத்துராமலிங்கத் தேவர் சொல்லுகிற - காட்டுகிற ஆள்தான் அய்ந்து சட்டமன்றத் தொகுதிகளிலும் அதற்குட்பட்ட பாராளுமன்றத் தொகுதியிலும் வெற்றி பெறுவார்கள். அதனால் அவ்வளவு செல்வாக்கு இருந்த அவரை விமர்சிக்க எல்லோரும் தயங்கினார்கள். இதுதான் 1957 ஆம் ஆண்டு நிலவரம். ஆனால் அந்த நிலையை அய்யாதான் போட்டுடைத்தார். அதற்குப் பிறகு காமராஜர் முத்துராமலிங்கத் தேவரைக் கைது செய்து திருச்சி சிறையிலடைத்தார். இரண்டு நாட்கள் அங்கிருந்த முத்துராமலிங்கத் தேவரை பாதுகாப்புக் கருதி கடலூர் சிறைக்கு மாற்றி விட்டார்கள்.

தண்டனை பெற்ற பின்பு எங்களுக்கு கை வைத்த பனியனும், டவுசரும் கொடுத்தார்கள். பி கிளாஸ் கைதிகளுக்கு முழுக்கை பனியனும் முழுக்கால் பைஜாமாவும் கொடுத்தார்கள். மேலும் ஒரு கட்டிலும் வேலை செய்ய ஆடர்லியும் கொடுத்தார்கள். இதுதான் அங்கிருந்த சலுகைகள்.

1959 ஆம் ஆண்டு மார்ச் மாதமோ, ஏப்ரல் மாதமோ நான் விடுதலையானேன். நாங்கள் விடுதலையான பின்பும் கீழவாளாடித் தோழர்களும் திருமங்கலம் தோழர்களும் சிறையிலிருந்தார்கள். இவர்கள்தான் அதிக காலம் தண்டனைக்குள்ளானவர்கள்.

சிறையில் பட்ட கஷ்டங்கள் சிறைக்குள் இருக்கும்போது பெரிதாகத் தெரியவில்லை. ஆனால், வெளியே வந்து பார்த்தால் வருமானம் இன்றியும், தொழில் நசிந்தும் பலருடைய குடும்பமே நிலைகுலைந்து போயிருந்தது. அதனால் கழகத் தோழர்கள் பட்ட துன்பங்களை வார்த்தைகளால் சொல்லி மாளாது.

ஆனால் கழகத்தினரின் இந்த சிறை வாழ்க்கைக்குப் பிறகு தமிழ்நாட்டில் சில பயன்கள் உண்டாயிற்று. ஒன்று, கையை வெட்டினால் ஒன்றரை ஆண்டுகள்தான் சிறைத் தண்டனை. ஆனால், சாதியை ஒழிக்க வேண்டும் என்று ஒரு பேப்பரைக் கொளுத்திவிட்டு இவர்கள் இரண்டாண்டுகள் சிறையில் இருந்திருக்கிறார்களே என்கிற பயம் உண்டாயிற்று. அதனால், தாழ்த்தப்பட்டவர்கள் தெருவில் நடக்கக் கூடாது என்று சொல்லப்பட்ட பல இடங்களில் எல்லோரும் தெருவில் நடக்கலாம் என்ற நிலை தானாகவே ஏற்பட்டது.

இப்போராட்டம் இன்றைய தலைமுறையினர் எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சமுதாய மாற்றம்.

இரண்டாவது, பெரியாரைத் திட்டினால், சாதியைச் சொல்லித் திட்டினால் உதைவிழும், ரோட்டில் வைத்து வெட்டுவார்கள் என்கிற பயம் அப்போதுதான் வந்தது. எங்களுக்கு மரியாதை இருந்ததா? இல்லையா? என்பதெல்லாம் வேறு சங்கதி.

பெரியாரை விமர்சனம் செய்தவனின் குடுமி அறுக்கிற நிகழ்ச்சி, பூணூல் அறுக்கிற நிகழ்ச்சி நடந்தது. இதை நாங்களா செய்தோம்? அப்போது கழகத்தின் முன்னணித் தோழர்களெல்லாம் சிறையிலிருந்தோம். சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டத்தை எரித்து ஆண்டுக்கணக்கில் தண்டனை பெற்று கழகத் தோழர்கள் சிறைக்குச் சென்றதால் உண்டான உணர்ச்சி, அனுதாபம் மக்களை இப்படிச் செயல்பட வைத்தது. மக்கள் மனத்திலே சாதி ஒழிப்பு எண்ணத்தை உறுதிப் படுத்தியது. அவசியத்தைப் புரிய வைத்தது. எங்களைப் போன்றோர் செய்த போராட்டத் தின் பலனாகவே இதை நாங்கள் பார்த்தோம்.

காமராஜர் அரசு சட்ட எரிப்புப் போராட்ட வீரர்களுக்கு எதிராக இவ்வளவு கடுமையாக நடந்திருக்க வேண்டியதில்லை. பின்னாளில் திருவாரூர் கே. தங்கராசு அவர்கள் கழகக் குடும்பங்களை அழித்தவரே காமராஜர் தான் என்று குறிப்பிட்டார். அய்யா அவர்கள் அதை ஒத்துக் கொள்ளவில்லை.

இந்தப் போராட்டம் மக்கள் மத்தியில் கழகத்திற்கு பெரிய மரியாதையை ஏற்படுத்தியது.

ஆனால், கழகத் தோழர்களின் குடும்பத்திற்கு பெரிய கஷ்டத்தை ஏற்படுத்தியது, பெரிய சுமையை ஏற்படுத்தியது, மிகப் பெரிய வலியை ஏற்படுத்தியது என்பது நிலையான உண்மை யாகும்.

பின்னாளில் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது, திருவாரூர் கே. தங்கராசு அவர்களின் வேண்டுகோளை ஏற்று சட்ட எரிப்புப் போராட்டத்தில் சிறையிலிருந்த தோழர்களுக்கு உதவி செய்யப்பட்டது என்பதும் இங்கே குறிப்பிடப்பட வேண்டிய செய்தி யாகும்.

நன்றி :
உடுமலைப்பேட்டை சுயமரியாதைப் பதிப்பகம் சார்பில்
கா. கருமலையப்பன், இரா. மனோகரன், ந. பிரகாசு தொகுத்த
சட்ட எரிப்புப் போராளியின் நினைவுகள் நூலிலிருந்து

## ஊழல் பெருச்சாளிப் பார்ப்பனர் கேத்தன் தேசாயை காப்பாற்றி வரும் குஜராத் அரசு

*தனியார் சுயநிதி மருத்துவக் கல்லூரி ஊழல் வழக்கில், முதல் குற்ற வாளியாக சேர்க்கப்பட்டுள்ள பார்ப்பன கேத்தன் தேசாயைத் தப்பவிடும் வேலையில், குஜராத் மாநில பாஜக அரசு ஈடுபட்டுள்ளது. பார்ப்பன கேத்தன் தேசாயிடம், சிபிஐ விசாரணை நடத்துவதற்கு அம்மாநில அரசு அனுமதி மறுத்துள்ளது.இந்திய மருத்துவக் கவுன்சிலின் தலைவராக இருந்தார் கேத்தன் தேசாய். இவர் தனதுபதவிக்காலத்தில், நாடு முழுவதும் தனியார் சுயநிதி மருத்துவக் கல்லூரி களுக்கு விதிகளை மீறி அனுமதி வழங்கியதாக குற்றச்சாட்டு எழுந்தது. கல்லூரி ஒன்றுக்கு தலா 25 கோடி முதல் 30 கோடி ரூபாய் வரைபெற்றதாகக் கூறப்பட்டது. மேலும், 200 தனியார் மருத்துவக் கல்லூரிகள், தலா 5 மருத்துவப் படிப்புக்கான இடங்களை கேத்தன் தேசாய்க்கு ஒதுக்கீடு செய்ததும், அந்த இடங்களை பல கோடி ரூபாய்க்கு மாணவர்களுக்கு அவர் விற்றதும் கண்டுபிடிக்கப் பட்டது. இதையடுத்து மருத்துவக் கவுன்சிலே கலைக்கப்பட்டதுடன், கேத்தன் தேசாய் மீதும் கடந்த 2010-ஆம் ஆண்டு சிபிஐ மூலம்வழக்கு பதிவு செய்யப்பட்டது.*

*அதைத் தொடர்ந்து, தில்லி, பஞ்சாப், சண்டிகர்மற்றும் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள தேசாயின் அலுவலகங்கள் மற்றும் வீடுகளில் நடத்தப்பட்ட சோதனை யில், தேசாயின் அகமதாபாத் வீட்டில் மட்டும் 212 கோடி ரூபாய் ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டது. அவருக்குச் சொந்தமான கல்லூரியில் உள்ள லாக்கரிலும் பலகோடி ரூபாய் பணம் பிடிபட்டது. மொத்தம்ரூ. 2 ஆயிரத்து 500 கோடி அளவிற்கு ஊழல்நடந்திருக்கலாம் என்று சிபிஐ அதிகாரிகள் சந்தேகம் எழுப்பி யிருந்தனர். இவற்றின் அடிப்படையில் 2011-ஆம்ஆண்டு செப்டம்பர் 11-ஆம் தேதி, தேசாய்மீது 142 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அதன்பிறகு, கடந்த 8 ஆண்டுகளாக இவ்வழக்கில் தேசாயை விசாரிக்க முடியாத நிலை சிபிஐ-க்கு ஏற்பட் டுள்ளது. காரணம், அரசுப் பதவியில் குறிப்பிட்ட அந்தஸ்தில் இருப்பவர் களிடம் விசாரணை நடத்த சம்மந்தப்பட்ட அரசு அமைப்பிடம் அனுமதி பெற வேண்டும் என்பதே ஆகும். பார்ப்பன தேசாய், குஜராத் பாஜக அரசின் செல்லப்பிள்ளை என்பதால், அவரை விசாரிப்பதற்கு குஜராத் பாஜக அரசு தொடர்ந்து அனுமதி மறுத்து வருகிறது. இந்த ஊழல் பார்ப்பனர் மோடி குஜராத் முதல்வராக இருந்த காலத்தில் ஊழல் கண்டறியப்பட்ட பிறகு பல உயர்பதவிகளில் அமர்த்தப்பட்டார். இது தொடர்பாக வெளிப்படையான அறிவிப்பையும் குஜராத் அரசு வெளியிட்டது. அண்மையில் பாட்டியாலா சிபிஐ நீதிமன்றத்தில் தேசாய் மீதான ஊழல் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, குஜராத் அரசின் அனுமதி மறுப்பை சிபிஐ சுட்டிக்காட்டியது. தங்களின் கையறு நிலையை சிபிஐ எடுத்துரைத்தது. மறுபுறத்தில், குஜராத் அரசின் அனுமதி இல்லாமல் தன்னை விசாரிக்கக் கூடாது என்று கேத்தன் தேசாய், தில்லி உயர்நீதிமன்றத்திற்கு சென்றார். அதனை உயர் நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டது. அரசு அனுமதி இல்லாமல் விசாரிக்கக் கூடாது என்று தேசாய்க்கு சாதகமாக உத்தரவிட்டு பிறப்பித்து விட்டது.இதனால், ஊழல் பேர்வழியான கேத்தன்தேசாய், பாஜகவின் துணையுடன் மீண்டும் மீண்டும் விசாரணையிலிருந்து தப்பும் நிலை ஏற்பட்டுள்ளது.*

நகர்ப்புற கொரிலாக்கள் என்ற பெயரில் சமுதாய சிந்தனைகளை விதைத்து வரும் எழுத்தாளர்கள், கருத்தாளர்களை பயங்கரவாதி களாக்கி தேசத் துரோகக் குற்றச்சாட்டில் கைது செய்து வரும் மோடி ஆட்சி, ஆயுதம் ஏந்தி அரசுக்கு எதிராக போராடி வரும் 'சனாதன் சன்ஸ்தா' என்ற இந்து மதவெறி அமைப்பு மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மவுனம் காத்து வருகிறது.

இந்து ஆன்மீகம் பேசிக் கொண்டே அரசுக்கு எதிரான ஆயுதம் தாங்கிய போரை நடத்துகிறோம் என்ற கொள்கையைக் கொண்ட இந்த அமைப்பு 2025க்குள் இந்தியாவை 'கடவுள் ராஜ்யம்' அல்லது 'இந்து இராஷ்டிர' மாக மாற்றுவோம் என்ற இலக்கோடு செயல்பட்டு வருகிறது. அதன் முதல்கட்டமாக தீயசக்திகளை அழிப்பது என்ற திட்டத்தோடு தபோல்கர், கல்புர்க்கி, பன்சால், கவுரி லங்கேஷ் ஆகியோரை சுட்டுக் கொலை செய்ததோடு, மேலும் நீண்ட கொலைப் பட்டியலையும் தயாரித்துள்ளது. சனாதன் சன்ஸ்தாவின் இந்து இராஷ்டிரத்தில் புத்தம், சமணம், சைவம், வைணவம், இஸ்லாம், கிறிஸ்துவம் ஆகிய மதங்களுக்கோ, மதத் தினருக்கோ இடமில்லை என்றும் இந்து இராஜ்யத்துக்கான தனி அரசியல் அமைப்பை உருவாக்கியிருப்பதாகவும் அந்த அமைப்பு கூறுகிறது. இதன்படி ஜனநாயகம், தேர்தல், நீதிமன்றங்கள் முற்றாக ஒழிக்கப்படும். இந்து தர்மத்தைப் பரப்பும் கல்வி முறை உருவாக்கப் படும் என்று அந்த அமைப்பின் கொள்கைப் பிரகடனம் கூறுகிறது. (ஆதாரம்: சனாதன் சன்ஸ்தா, வெளியிட்ட 'சாஸ்தரா தர்ம சாதனா' நூல், 1999)

***தபோல்கரிலிருந்து – கவுரி லங்கேஷ் வரை சுட்டுக் கொன்ற இந்த அமைப்பு, இராணுவம், போலீசை வீழ்த்தவும் படை திரட்டுகிறது. தேர்தல், நீதிமன்றம், ஜனநாயகத்துக்கு அவர்கள் அமைக்கப் போவதாகக் கூறும் இந்து இராஷ்டிரத்தில் இடமில்லை என்று தனது பத்திரிகையில் எழுதி வருகிறது.***



# 'இந்துராஷ்டிரம்' உருவாக்க 'படுகொலைகள்'

## 'சனாதன் சன்ஸ்தா'வின் பார்ப்பன பயங்கரவாத பின்னணி

பகுத்தறிவாளர் டாக்டர் நரேந்திர தபோல்கர் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் மகாராஷ்டிரா பயங்கரவாத தடுப்புப் பிரிவு இதுவரை இந்த அமைப்பைச் சார்ந்த 7 நபர்களைக் கைது செய்துள்ளது. வைபவ் ரவுத், சரத் கலாஸ்கர் மற்றும் சுதான்வ கொந்தலேகர் ஆகிய மூவரும் கடந்த ஆக.10ஆம் தேதி கைது செய்யப்பட்டனர். ரவுத் பங்களாவிலிருந்து ஆயுதங்கள், வெடி மருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த பயங்கரவாத மதவெறிக் கும்பல், பல்வேறு சங்கிலித் தொடர்புகளோடு களமிறங்கியிருப்பது விசாரணையில் தெரிய வந்தது. ரவுத் தந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் பம்பாய் மகாராட்சி முன்னாள் சிவசேனை உறுப்பினர் பங்கர்கர் என்பவர், ஆகஸ்ட் 19ஆம் தேதி கைது செய்யப்பட்டார். இவர் இந்து ஜனஜக்குரி என்ற மற்றொரு இந்து பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர். தொடர்ந்து கலாஸ்கர் மற்றும் சுதான்வ கொந்தலேகர், அவினாஷ் பவார் ஆகிய இந்து பயங்கரவாதிகளும் கொலையில் தொடர் புள்ளதாக கண்டறியப்பட்டு கைது செய்யப் பட்டுள்ளனர். தபோல்கரை துப்பாக்கியால் சுட்டவர் என்று கைது செய்யப்பட்டுள்ள சச்சின் அந்துரே என்பவரும் இந்து பயங்கரவாத குழுவைச் சார்ந்தவர். குறிப்பாக பெங்களூரில் இந்துத்துவ எதிர்ப்பாளரும் பத்திரிகை யாளருமான கவுரி லங்கேஷ் சுட்டுக் கொல்லப்பட்ட விசாரணை தீவிரமான நிலையில்தான் இந்து மதவெறி அமைப்புகளுக் கிடையே உள்ள தொடர்புகள் கண்டறியப்பட்டு, பயங்கரவாதிகள் கைது செய்யப்படுவது தொடங்கியது.

தபோல்கர், பன்சாரே (இருவரும் மகாராஷ்டிர பகுத்தறிவாளர்கள்) சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில், 'சன்தான் சன்ஸ்தா' அமைப்பைச் சார்ந்த விரேந்திர தாவ்டே மற்றும் சமீர் கெய்க்வார்டு இருவரும் 2016ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டனர். இதில் தாவ்டே ஒரு மருத்துவர். தபோல்கர் கொலைக்கு சதித் திட்டம் தீட்டி நிறைவேற்றியவர் என்று குற்றம்சாட்டப் பட்டார். கைது செய்யப்பட்ட மற்றொரு நபரான கெய்க்வார்ட் பிறகு விசாரணையில் விடுதலை செய்யப்பட்டார்.

ஏப். 2006இல் நந்தீட் நகரில் உள்ள ஒரு தீவிர ஆர்.எஸ்.எஸ். பிரமுகரின் வீட்டில் குண்டு வெடித்தது. 2007 பிப்ரவரியில் அதே நந்தீட் நகரில் மீண்டும் குண்டு வெடித்தது. இரண்டு பேர் கொல்லப்பட்டனர். 2008ஆம் ஆண்டில் மாலேகான் குண்டு வெடிப்பில் இந்து பயங்கரவாத அமைப்பைச் சார்ந்த சாத்வி பிரக்யாசிங், சிறிகாந்த் புரோகித் இருவரும் கைது செய்யப்பட்டனர். அதே ஆண்டில் தானே, வாஷி மற்றும் பான்வெல் நகரங்களில் உள்ள தியேட்டர்களில் குண்டு வெடித்தது. இதற்குக் காரணமான ரமேஷ் கத்காரி மற்றும் விக்ரம் பாவே இருவரும் கைது செய்யப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டு, 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர். இதில் கத்காரி அண்மையில் பிணையில் வெளி வந்துள்ளார். அவரை 'வீரத் துறவி'யாக சந்தான் சன்ஸ்தா அங்கீகரித்து கவுரவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தத் தொடர் வன்முறைகளுக்கு 'சன்ஸ்தா' தொடர்பு இருப்பதை இது உறுதிப்படுத்துகிறது. கோவாவில் மார்கோவா என்ற இடத்தில் நடந்த குண்டு வீசித் தாக்குதலில் சன்ஸ்தா அமைப்புக்கு தொடர்பு உள்ளது அம்பலமானது. அந்த குண்டு வெடிப்பில் சிக்கி 'சன்ஸ்தா'வின் இரண்டு உறுப் பினர்கள் சம்பவ இடத்தில் பலியானார்கள்.

ஆக நாடு முழுதும் இந்த பயங்கரவாத அமைப்பு செயல்பட்டு வருவதை உணர முடிகிறது. பெரும்பான்மை மக்களான இந்துக்களுக்காகத் தானே இவைகள் நடக்கின்றன என்ற கண்ணோட்டத்தோடு புலனாய்வு அமைப்புகளும் நடுவண் அரசும் இந்த அமைப்புகள் மீது தீவிர நடவடிக்கை எடுக்காமல், ஒதுங்கி நிற்கின்றன. 'சனாதன் சன்ஸ்தா'வை தடை செய்ய வேண்டும் என்று கோவா மற்றும் மகாராஷ்டிரா ஆட்சிகள் 2008ஆம் ஆண்டிலிருந்தே வலியுறுத்தி வருகின்றன. ஆனால் தடை செய்வதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லை என்று கூறி நடுவண் அரசு தடை செய்ய மறுத்து வருகிறது. சன்ஸ்தா நாடு முழுதும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி உதவிகளையும் தாராளமாக செய்து வருகிறது.

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி நடந்த



போதுகூட, இந்த அமைப்பை முடக்குவதற்கோ, எங்கிருந்து நிதி வருகிறது என்பதைக் கண்டறிவதற்கோ ஆர்வம் காட்டவில்லை. இஸ்லாமிய பயங்கரவாதம் என்ற போர்வைக்குள் பதுங்கிக் கொண்டு இந்தச் செயல்களை அதற்கான எதிர்வினை என்று நியாயப்படுத்தும் மனப்போக்கே மேலோங்கி நின்றது. 'இஸ்லாமிய பயங்கரவாதம்' என்ற சொற்றொடர் 1990ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப் பட்டது இந்த 'ஒற்றைச்சொல்', 'மந்திரச் சொல்லாக' மாறி, பல அப்பாவி இஸ்லாமியர் களின் உயிரைப் பறித்தது. பல இஸ்லாமிய இளைஞர்களும், அவரது குடும்பத்தினரும் பொய் வழக்குகள் போடப்பட்டு 'பயங்கரவாதி' என்ற முத்திரை குத்தி சிறையில் அடைக்கப் பட்டனர். அதைப் பயன்படுத்தி 'சன்ஸ்தா' வெளிப்படையாக ஆட்சிகளின் ஆதரவோடு வெளியே வந்தது. தொலைக்காட்சி விவாதங்களிலேயே இந்த அமைப்பின் அடையாளத்தோடு பங்கேற்றுப் பேசினர். இந்தப் போக்கை முற்றிலும் மாற்றி உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தவர் மகாராஷ்டிரா 'பயங்கரவாத தடுப்புப் பிரிவு' தலைமை அதிகாரி ஹேமந்த் கார்கரே தான். அவர்தான் இந்த பயங்கரவாத செயல்களுக்குப் பின்னால் பதுங்கி இருந்த இந்த கும்பலை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார். அதுவரை 'இஸ்லாமிய பயங்கரவாதம்' என்ற முகமூடிக் குள் பதுங்கியிருந்த இந்து பயங்கரவாதம் முகத்திரை கிழிக்கப்பட்டு வெளியே வந்தது.

சனாதன் சன்ஸ்தா மற்றும் ஹிந்து ஜன்சக்ருதி சுமிதி (எச்.ஜெ.எஸ்.) என்ற இரண்டு மத பயங்கரவாத அமைப்புகளும், பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து இந்து இராஷ்டிரம் உருவாக்கும் நோக்கத்தோடு 1995ஆம் ஆண்டு தொடங்கப்பட்டவை. இரண்டு அமைப்பு ளையும் தோற்றுவித்தவர் ஒரு மருத்துவர். அவர் மனோவசியம் (hypnotherapist) செய்வதையும் தொழிலாக நடத்தி வந்தார். அவர் பெயர் அத்வாலே. தொடக்கத்தில் போலி அறிவியல் - ஆன்மீகம் ஆகியவற்றைக் கலவையாக்கிப் பிரச்சாரம் செய்து வந்தார். மும்பை சியோன் பகுதியைச் சார்ந்த இவர், இங்கிலாந்தில் 'மனோவசியம்' தொடர்பாக, தனது மனைவியுடன் சேர்ந்து 1971லிருந்து 1978 வரை ஆய்வு செய்தார். பிறகு 1978லிருந்து 90 வரை சியோனில் 'கிளினிக்' ஒன்றை தொடங்கினார். இதிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு சனாதன் சன்ஸ்தாவைத் தொடங்கினார். கோவாவைச் சார்ந்த அஷ்போஷ் பிரபு தேசாய் என்ற உளவியல் மருத்துவர் இந்த அமைப்புக்கு மதவெறி கருத்தியலை உருவாக்கித் தந்தார் என்று கூறப்படுகிறது. கோவா, மகாராஷ்டிரா மற்றும் கருநாடக மாநிலங்களில் இந்த பயங்கரவாத 'அமைப்பு' இப்போதும் தீவிரமாக செயல்படுகிறது. தங்களது ஆன்மீக பயங்கரவாத கருத்துகளுக்கு மதவெறியர்களிடம் கிடைத்த ஆதரவினால் உற்சாகமடைந்த அத்வாலே, 'இந்து இராஷ்டிரம்' என்ற இலக்கை நோக்கி நகர்த்தினார். தொடக்கக் காலங்களில் அதாவது, 1999இல் இந்த அமைப்பு அதன் உறுப்பினர் களுக்கு தற்காப்பு மற்றும் ஆயுதப் பயிற்சிகளை

அளித்தது. சமூகத்தில் மத எதிர்ப்பாளர்களை அழித்தொழிக்க ஆயுதத்தை கையில் எடுக்க வேண்டும் என்று மூளைச் சலவை செய்தார்கள். முஸ்லீம்களும், கிறிஸ்துவர்களும் இந்து எதிர்ப்பாளர்கள் பட்டியலுக்குள் கொண்டு வரப்பட்டனர். "5 சதவீதம் பேர் மட்டுமே ஆயுதப் பயிற்சி எடுத்தால் போதும்; இந்து இராஷ்டிரம் அமைக்கப் போராடும்போது, கடவுளே சில நபர்கள் வழியாக ஆயுதங்களைக் கிடைக்கச் செய்து விடுவார்" என்று சீடர் களிடம் கூறி அத்வாலே நம்பிக்கையூட்டினார். 'துப்பாக்கி சுடுவதற்கு சிறப்புப் பயிற்சி ஏதும் தேவை இல்லை. கடவுள் பெயரைக் கூறிக் கொண்டே குறி வைத்தால் குறி தப்பாது' என்றும் சீடர்களிடம் கூறினார். தற்காப்புக் கலைகளைக் கற்பிக்க தர்மசேனா என்ற அமைப்பைத் தொடங்கினர். இராணுவ உடை தரித்து, சீடர்கள் தற்காப்புப் பயிற்சி பெறும் புகைப்பட ஆதாரங்கள் வெளி வந்துள்ளன. இந்த அமைப்பு நடத்திய 'சந்தான் பிரபாத்' என்ற இதழில் அத்வாலே இராணுவ உடை தரித்துக் கொண்டு சீடர்களிடம் கீழ்க்கண்ட வாறு பேசுகிறார்: "காங்கிரஸ் போன்ற மதச் சார்பற்ற சக்திகளிடம் சிக்கி, இந்தியா துண்டுதுண்டாக சிதறாமல் தடுக்க இந்து இராஷ்டிரம் அமைப்பது தவிர்க்க முடியாதது" என்று அவர் பேசியதாக 'சந்தான் பிரபாத்' இதழ் செய்தி வெளியிட்டுள்ளது (2005).

'பார்ப்பனியம் - வர்ணாஸ்ரம அமைப்பு' என்பதைக் கொள்கையாக ஏற்றுக் கொண்ட அமைப்பு இது. இந்துப் பெண்களையும் பிற்படுத்தப்பட்ட இடைநிலை ஜாதியினரையும் தனது அமைப்பில் இணைத்துக் கொண்டது. (பார்ப்பனிய சமூகத்தை பார்ப்பனர்களால் மட்டுமே உருவாக்க முடியாது என்பதை புரிந்து வைத்திருந்தார்கள்). இந்த அமைப்பு ஏராளமான நூல்களையும் வெளியிட்டுள்ளது. இந்து ஆண்களும், பெண்களும் உடை மற்றும் நகை அணிய வேண்டிய முறைகளையும், இந்து பண்டிகைகளைக் கொண்டாடும் வழிமுறை களையும், கடவுளை வணங்கும் வழிபாட்டு முறைகளையும் இந்த நூல்கள் விளக்குகின்றன. இந்த அமைப்பு தனக்கான தனிக் கடவுள் உருவத்தை உருவாக்கியுள்ளது. இந்து கடவுளின் படங்கள் முறையாக வடிவமைக்கப்படவில்லை என்பதால் அந்தப் படங்களைப் பயன்படுத்தக் கூடாது என்று இந்த நூல்கள் வலியுறுத்து கின்றன. சன்ஸ்தா உருவாக்கிய கடவுள் மட்டுமே பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கூடியவர். ஆன்மிகத்தில் ஊறிப் போனவர்களுக்கு கனவில் இந்தக் கடவுள் தோன்றுவார் என்றும் நம்ப வைத்தனர். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் தங்கள் அமைப்பில் இருப்பதாகக் கூறி சீடர்களை நம்ப வைத்துள்ளனர். முடி உதிர்தல், பாலுறவு பிரச்சினைகள் உள்ளிட்ட எந்தப் பிரச்சனையையும், 'மனோவசியம்' மூலம் சரிப்படுத்த முடியும் என்றும், அத்வாலே மலட்டுத் தன்மையை நீக்கி விடுவார், திருநங்கைகளை ஆணாக மாற்றுவார் என்றும் நூல்களில் எழுதி வைத்துள்ளனர். வீடு வீடாகச் சென்று, சூடம், ஊதுவத்திகள் மற்றும் தங்கள் நூல்களை விற்று மிகவும் அமைதியான அமைப்பாக தங்களை வெளிப்படுத்திக் கொள்வது வழக்கம்.

ஆன்மிக நிறுவனங்களில் நடப்பது போலவே இந்த அமைப்பின் ஆசிரமங்களிலும் குடும்பத்தை உதறிவிட்டு பெண்கள் அடைக்கலம் புகுந்தனர். குடும்ப உறவுகளைத் துண்டித்துக் கொண்டு ஆஸ்ரமத்துக்கு வந்த பல பெண்கள் கதி என்ன என்பது தெரியாத நிலையில், பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் இணைந்து பம்பாய் உயர்நீதிமன்றத்தில் பொது நலன் வழக்குத் தொடர்ந்து இந்த அமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

சன்ஸ்தாவின் இணை அமைப்பான 'ஹிந்து ஜன் சுக்ருதி சமிதி 2011ஆம் ஆண்டு 'லவ்ஜிகாத்' என்ற நூலை வெளி யிட்டது. இஸ்லாமிய இளைஞர்கள் இந்து பெண்களை ஏமாற்றி திருமணம் செய்து மதமாற்றம் செய்கிறார்கள் என்றும் ஒவ்வொரு பிரிவினரையும் திருமணம் செய்ய எவ்வளவு பணம் தரப்படுகிது என்றும் அந்த நூலில் 'கட்டண விவரங்கள்' என்று பட்டியல் போட்டுள்ளனர்.

இந்து இராஷ்டிரம் அடைவதற்கு இராணுவமும் காவல்துறையும் முட்டுக்

கட்டைப் போட்டு வருகின்றன. இராணுவத்தையும் காவல்துறையையும் தோற்கடிக்க வேண்டும் என்று 'சந்தான் பிரபாத்' இதழ் (ஜூன் 9, 2013) வெளிப்படையாகவே அறிவித்தது.

> "காவல்துறை எப்போதும் இந்துக்களிடம் பகைமை காட்டுகிறது; இஸ்லாமியர்கள் குற்றங்களை மன்னிக்கிறது. இந்துக்களுக்கு எதிராக காவல்துறை நடத்தும் வன்முறைகளை மறந்து விடாதீர்கள். இப்போதிருந்தே அத்தகைய போலீசாரின் பட்டியலை தயாரியுங்கள். நாம் நடத்தப் போகும் புரட்சியில் முதல் நடவடிக்கை போலீசாருக்கு எதிராகவே இருக்க வேண்டும். போலீசையும் இராணுவத்தையும் வீழ்த்தாமல் நாம் இந்துஇராஷ்டிரத்தை அமைக்க முடியாது"

என்று அந்த இதழ் அச்சிலேயே பிரகடனப் படுத்தியது. 4 இலட்சம் இந்துக்களைக் கொண்ட படை ஒன்றை உருவாக்க வேண்டும்; அவர்களுக்கு இராணுவப் பயிற்சி தர வேண்டும்; 30 இலட்சம் போலீஸ், இராணுவம் மற்றும் துணை இராணுவப் படையோடு போரிட்டு வீழ்த்த முடியும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம் என்றும் அதே ஏடு அறிவித்தது.

ஆர்.எஸ்.எஸ். தீவிரமாக இந்து இராஷ்டிரம் நோக்கி செயல்படவில்லை என்ற விரக்தியில்தான் 'சனாதன் சன்ஸ்தா' உருவானது. இந்த அமைப்பு தேர்தல், அரசியல் சட்டம், ஜனநாயகம் ஆகிய அமைப்புகளை வெளிப்படையாக எதிர்க்கிறது. ஆர்.எஸ்.எஸ். இந்த அரசியலை எதிர்க்காமல் அதைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தும் அணுகுமுறையை இந்த அமைப்பு கடுமையாக விமர்சிக்கிறது. அனைத்து அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் 'இந்து இராஷ்டிராவின்' எதிரிகள் என்று இந்த அமைப்பு ஏற்கனவே அறிவித்திருக்கிறது (சந்தான் பிரபா இதழ்-2013). ஆர்.எஸ்.எஸ்சை இந்த அமைப்பின் தலைவர் அத்வாலே வெளிப்படையாகவே குற்றம்சாட்டி இவ்வாறு எழுதினார்.

"ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் 40 இலட்சம் தொண்டர்கள் இருந்தும் கடந்த 68

## அனைத்து அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் 'இந்து இராஷ்டிராவின்' எதிரிகள் என்று இந்த அமைப்பு ஏற்கனவே அறிவித்திருக்கிறது

ஆண்டுகளாக அவர்கள் ஆன்மிகப் பயிற்சிகளை தரவில்லை. அனைத்துத் துறைகளிலும் வேகம் காட்டாமல் செயல்பட்டு வருகிறது. அதற்கு மாறாக அடுத்த அய்ந்து ஆண்டுகளில் 4 இலட்சம் ஆன்மிகப் போராளிகள் நமது அமைப்புக்குக் கிடைத்து விடுவார்கள். அவர்கள் ஆன்மிகத்தைக் கையில் எடுத்து இந்து இராஷ்டிராவுக்கான புரட்சியைத் தொடங்குவார்கள். 2023இல் நாம் இந்து இராஷ்டிரத்தை அமைத்து விடுவோம்" என்று சந்தன் பிரபா இதழில் அத்வாலே எழுதியுள்ளார். ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கும் சந்தன் சன்ஸ்தாவுக்கும் ஒரே இலக்கு 'இந்துஇராஷ்டிரம்' அமைப்பதுதான். ஆனாலும் இவர்களுக் கிடையே உள்ள மோதல்களின் பின்னணியில் பார்ப்பன உயர்ஜாதிக் கூறு அடங்கி இருக்கிறது.

'சித்பவன்' பார்ப்பனர்களுக்கும் கர்கடே (Karhade) பார்ப்பனர்களுககும் இடையே யார் உயர்ந்த ஜாதி பார்ப்பனர் என்ற போட்டிதான் இந்த மோதலின் பின்னணி என்று கூறப்படுகிறது. சாவர்க்கரின் இந்து மகாசபை முன்னிறுத்திய 'இந்துத்துவா'வுக்கும் ஆர்.எஸ்.எஸ். சித்பவன் பார்ப்பனர்கள் முன்னிறுத்திய இந்துத்துவாவுக்கும் இடையே நடந்த மாறுபாடுகளின் தொடர்ச்சிதான் இந்த மோதலும். சாவர்க்கர் பேசிய இந்துத்துவாவை 'சனாதன சன்ஸ்தா' ஆதரிக்கிறது. உண்மையில் சன்ஸ்தாவின் அடிப்படை இலட்சியம் வர்ணாஸ்ரம பார்ப்பனிய இராஜ்யம்தான் என்றாலும் அதை நேரடியாகக் கூறாமல் பிற இடைநிலை ஜாதியினர், பெண்களின் ஆதரவைத் திரட்டும் நோக்கத்தோடு இந்து கோயில்களில் நடக்கும் ஊழல்களை எதிர்க்க வேண்டும் என்ற முழக்கத்தை 'முகமூடியாக' முன் வைக்கிறது. இந்த தந்திரமான பிரச்சாரத்தினால் 'இந்து' உணர்வுள்ள வெகுமக்களை இடைநிலை ஜாதியினரை தன் பக்கம் இழுக்க

முயற்சிக்கிறது. பா.ஜ.க. கொலைக் குற்றச்சாட்டுகளின் கீழ் இந்து பயங்கர வாதிகளை கைது செய்ததை 'சன்ஸ்தா' கண்டித்தாலும் தங்களுக்கு பாதுகாப்பாக பா.ஜ.க. ஆட்சி இருக்கும் என்று உறுதியாக நம்புகிறது.

மற்றொரு கருத்தையும் குறிப்பிட வேண்டும். ஆர்.எஸ்.எஸ்.சும் சனாதன் சன்ஸ்தா அமைப்பும் மகாராஷ்டிராவின் மேற்குப் பகுதியில் கைகோர்த்து செயல்பட்டு வருகின்றன. மகாராஷ்டிராவின் மேற்குப் பகுதி கருநாடகாவின் பெல்காம் வரை நீளுகிறது. கடந்த 15 ஆண்டுகளாகத்தான் இந்தப் பகுதியில் இந்து பயங்கரவாத அமைப்புகள் தீவிரமாக காலூன்றி வருகின்றன. இந்தப் பகுதி பால் உற்பத்தி, கரும்பு விவசாயம் நிறைந்த பகுதியாகும். கூட்டுறவு சங்கங்கள் வலிமையாக இயங்கி வருகின்றன. அதன் காரணமாக ஏராளமான பொறியியல் கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. காங்கிரஸ் கட்சிக்கும் சரத் பவாரின் தேசியவாத காங்கிரசுக்கும் செல்வாக்கு உள்ள பகுதி. வரலாற்றில் ஜாதி எதிர்ப்பு, சமூகப் புரட்சி இயக்கங்கள் இந்தப் பகுதியில்தான் தோன்றின. எனவே ஆர்.எஸ்.எஸ். இந்தப் பகுதிகளில் ஊடுறுவ முடியாத நிலையில் அதன் காரணமாக விரக்தி அடைந்த இந்து தீவிரவாதிகள், 'சன்ஸ்தா'வை இப்பகுதியில் பரப்பும் முயற்சிகளில் இறங்கினர்.

மேற்கு மகாராஷ்டிராவில் காலூன்ற முடியாத நிலையிலிருந்த ஆர்.எஸ்.எஸ். இப்போது சன்ஸ்தா உள்ளிட்ட பல்வேறு தீவிரவாத அமைப்புகள் செயல்படுவதற்கு உதவுகிறது. ஆர்.எஸ்.எஸ்.ஸோடு நெருங்கிய தொடர்புடைய சாம்பாஜிபிடே என்பவர், 1984இல் மேற்கு மகாராஷ்டிராவில் 'ஷிவ் பிரதிஸ்தான் இந்துஸ்தான்' என்ற அமைப்பைத் தொடங்கி இளைஞர்களை குறிப்பாக மராத்தியர்களை 'இந்துத்துவா' நோக்கி அணி திரட்டி வருகிறார். சிவாஜி மகாராஜ் குறித்த புனைவு வரலாறுகளைப் பேசி இஸ்லாமிய வெறுப்புகளை விதைத்து வருகிறார். பிரதமர் மோடி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் ஆதரவு பாராட்டுகளுடன் அவர் வளர்ந்து வருகிறார். 'சங்லி' என்னும் இடத்தில் நடந்த மதக்கலவரம்; கடந்த ஜனவரியில் பீமா கொரேகான் பகுதியில் தலித் மக்கள் மீது நடத்தப்பட்ட ஜாதிவெறித் தாக்குதலுக்கு மூளையாக இருந்து திட்டம் தீட்டியது இவர்தான் என்று கூறப்படுகிறது. புனேயைச் சார்ந்த மிலின்ட் எக்போத்தே (Milind Ekbote) என்ற இந்து தீவிரவாதி 'சம்ஸ்தா இந்து அகாதி' என்ற அமைப்பை நடத்தி வருகிறார். கோரேகான் கலவரத்தில் இவருக்கும் முக்கிய பங்கு உண்டு என்று குற்றம்சாட்டப்படுகிறது. இவர் மீது 23 கிரிமினல் வழக்குகள் உள்ளன. 'இந்துஇராஷ்டிர சேனா' என்ற அமைப்பை தனஞ்செய் தேசாய் என்பவர் தொடங்கி புனே அதன் சுற்றுப் பகுதியில் இளைஞர்களை திரட்டி வருகிறார். 2014இல் புனேயைச் சார்ந்த மொஷின்ஷேக் என்ற முஸ்லிம் பொறியியல் பட்டதாரியைக் கொலை செய்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ளார். அதுமட்டுமின்றி கூலிப் படைகளைக் கொண்டு இஸ்லாமியர்களுக்கு எதிராக கலவரம், வன்முறை, கொலைகளில் ஈடுபட்டு வருபவர் 'சனாதன் சன்ஸ்தா' - மேற்கு மகாராஷ்டிராவை குறி வைத்து செயல்படுவதோடு, மேற்கு மகாராஷ்டிராவுக்காக அதன் அதிகாரபூர்வ பத்திரிகையான 'சந்தான் பிரபாத்'துக்கு தனிப் பதிப்பையும் வெளியிட்டு வருகிறது. இஸ்லாமிய, கிறிஸ்துவ வெறுப்பை கட்டமைக்கும் வரலாற்றுப் புரட்டுகளை பரப்பி வருவதோடு 'இந்துராஷ்டிரம்' அமைக்க மராத்தா மற்றும் தலித் இளைஞர்களை குறி வைத்து அணி திரட்டி வருகிறது.

காவல்துறை, இராணுவம், ஜனநாயகம், தேர்தல் போன்ற அரசு அமைப்புகளை வெளிப்படையாக எதிர்த்துக் கொண்டு - தபோல்கர், கல்புர்கி, பன்சாரே, கவுரி லங்கேஷ் ஆகியோரை சுட்டுக் கொலை செய்த குற்றச் சாட்டுக்குள்ளான ஒரு அமைப்பை மோடி ஆட்சி தடை செய்ய மறுத்து வருகிறது. தடை செய்ய போதுமான சான்றுகள் இல்லை என்கிறது. இந்தக் கொலைகளைத் தவிர வேறு என்ன சான்றுகள் வேண்டும் என்று நடுவண் அரசு எதிர்பார்க்கிறது?

('எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி' அக். 13, 2018 இதழில் சங்கமித்ரா பிரபால் எழுதிய கட்டுரை; தமிழில் 'இரா')

கட்டுரைகளுக்கு ஆதாரங்கள் சன்ஸ்தா வெளியிட்ட நூல்கள் - இதழ்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.




# ஆரியர்களே பூர்வீகக் குடிகள் என்ற வரலாற்றுப் புரட்டுகள் தகர்கின்றன

## திராவிட நாகரிகத்தை உறுதி செய்கிறது, ராகிகடி ஆய்வு

*அரியானாவில் ராகிகடி என்ற இடத்தில் 4500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த மிகப் பழமையான மனித எலும்புக் கூடு அறிவியல் சோதனைக்கு (டி.என்.ஏ.) உள்ளாக்கப்பட்டது. அப்பகுதியில் வாழ்ந்த சிந்துவெளி நாகரிக மக்கள் திராவிடர்களே என்றும், ஆரிய மரபணு வழி வந்தவர்கள் அல்ல என்றும் அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டு விட்டது.*

ஆரியர்கள் வந்தேறிகள் அல்ல; அவர்கள் பூர்வீகக் குடிகள் என்ற இந்துத்துவா வரலாற்றுப் புரட்டுக்கு சரியான அறிவியல் மறுப்பாக வெளி வந்திருக்கும் இந்த ஆய்வை கடந்த 3 ஆண்டு காலமாக வெளியிடாமலேயே ஆய்வாளர்கள் தயக்கம் காட்டி வந்தனர்.

‘இந்தியா டுடே’ 2018 செப்.10இல் வெளிவந்த ஆங்கிலப் பதிப்பு ‘சங்கடம் தரும் உண்மை’ “An Inconvenient Truth” என்ற தலைப்பில் விரிவான கட்டுரை வெளியிட்டுள்ளது. அதன் சுருக்கமான தமிழ் வடிவம்:

புனேவின் டெக்கான் கல்லூரியின் துணை வேந்தரான டாக்டர் வசந்த் ஷிண்டே ஒரு அகழ்வாராய்ச்சியாளர். இவரும் இவரது அணியினரும் ஹரியானாவின் ராகிகடி என்ற இடத்தில் அகழ்வாராய்ச்சியை 2015ல் மேற் கொண்டனர். அந்த ஆய்வின் முடிவுகள் பெரும் தயக்கத்திற்குப் பிறகு இப்போது வெளியாகி யிருக்கின்றன. இந்த முடிவை இந்துத்துவ வாதிகள் எப்படி எதிர்கொள்வார்களோ என்ற அச்சம்தான் தயக்கத்திற்குக் காரணம்.

ராகிகடியில் இந்த அணி அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டபோது, 4,500 ஆண்டுகள் பழமையான எலும்புக்கூடு ஒன்று கிடைத்தது. அந்த எலும்புக்கூட்டின் மண்டை ஓட்டில் உள்ள Petrous bone என்ற காதுகளைப் பாதுகாக்கும் பகுதியை பிரித்தெடுத்து, அதிலிருந்து அந்த எலும்புக்கூட்டின் மரபணு ஆராயப்பட்டது. அந்த ஆராய்ச்சியின் முடிவுகள் சில கேள்விகளுக்குப் பதில் அளித்திருக்கின்றன.

*கேள்வி: ஹரப்பா நாகரீகத்தைச் சேர்ந்த வர்கள்தான் சமஸ்கிருத மொழியையும் வேதகால இந்து மதத்தையும் உருவாக்கினார்களா?*

**பதில்:** இல்லை.

*கேள்வி: அவர்களது மரபணு, ஆரியர் - திராவிடர் என்ற பிரிவில் யாரோடு பொருந்து கிறது?*

**பதில்:** திராவிடர்கள்.

*கேள்வி: தற்போதைய காலத்தில் இவை தென்னிந்தியர்களுடன் அதிகம் பொருந்து கின்றனவா, அல்லது வட இந்தியர்களுடனா?*

**பதில்:** தென்னிந்தியர்கள்.

எல்லாமே இந்துத்துவாவாதிகளுக்கு மிகச் சிக்கலான கேள்வி, பதில்கள். இந்த ஆய்வின் முடிவுகள் விரைவில் 'சயின்ஸ்' இதழில் பதிப்பிக்கப்படவிருக்கின்றன.

2015லேயே ஆய்வு முடிந்துவிட்டது என்றாலும் விவகாரம் அரசியல் ரீதியாக உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியது என்பதால் ஷிண்டே முடிவுகளைப் பதிப்பிக்கத் தயங்கினார். ஹரப்பா தொடர்பான எந்த ஆய்வு முடிவானாலும் தற்போதை மத்திய அரசின் இந்துத்துவக் கருத்தை எதிர்க்க வேண்டி யிருக்கும். அதாவது, வேத காலமும் அப்போதைய இந்து மதமும்தான் இந்திய நாகரீகத்தின் துவக்கம் என்பதைத்தான் தற்போதைய அரசு வலியுறுத்த விரும்புகிறது.

ஆனால், ஹரப்பா நாகரீகம் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இது சிக்க லானது. 1924ல் சிந்துச் சமவெளி நாகரீகத்தின் சிதைவுகளை காலனீய அகழ்வாராய்ச்சி யாளர்கள் கண்டுபிடித்தபோதே, அது வேத காலத்திற்கு முந்தைய நாகரீகம் என்பது தெளிவாகி விட்டது. அந்த நாகரீகம் வடமேற்குப் பகுதியிலிருந்து வந்த ஆரியர்களால் அழிக்கப் பட்டது என்ற கருதுகோளை அவர்கள் முன் வைத்தனர். பின் வந்த ஆராய்ச்சியாளர்கள் ஆரியர்களின் ஆக்கிரமிப்பு என்ற கருத்தை ஏற்கவில்லை. ஆனால், சிந்துச் சமவெளி நாகரீகம் வேதகாலத்திற்கு முந்தையது என்ற கருத்தை ஏற்றனர்.

இந்துத்துவ தேசியவாதிகளைப் பொறுத்த வரை இந்த ஆரிய ஆக்கிரமிப்பு கருத்தாக்கம் பெரும் எரிச்சலையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியது. ஆனால், தென்னிந்தியர்களைப் பொறுத்தவரை சிந்துச் சமவெளி நாகரீகம் திராவிட நாகரீகம் எனக் கருதினர்.

உண்மையில் சிந்துச் சமவெளி யில் வசித்தவர்கள் யார் என்பது மர்மமாகவே இருந்தது. ராக்கிகடியில் கிடைத்திருக்கும் 4500 ஆண்டு பழமையான இந்த எலும்புக்கூடு இதில் சில கேள்விகளுக்குப் பதிலளிக்கிறது. இந்த எலும்புக்கூட்டுக்கு I4411 எனப் பெயரிடப்பட் டிருக்கிறது. ராகிகடிதான் இந்தியாவின் மிகப் பெரிய ஹரப்பா-சிந்துச்சமவெளி நாகரீக பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தானின் சிந்து பகுதியில் 1920களில் அகழ்வாய்வு செய்யப்பட்ட மொஹெஞ்ஜோ - தாரோவைவிட மிகப் பெரிய ஆகழ்வாய்வுத் தளம் இது.

1960களில் இருந்தே இங்கே ஆய்வு மேற் கொள்ளப்பட்டுவருகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு 7000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இங்கு ஒரு நகர்ப்புற நாகரீகம் இருந்திருக்கிறது என்பது பல முறை நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இன்றைக்கு 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தப் பகுதியில் உயர்வான ஒரு ஹரப்பா நாகரீகம் இருந்திருக்கிறது என்பதற்குப் போதுமான சான்றுகள் கிடைத்திருக்கின்றன. 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக மிகப் பெரிய நகரமாக இருந்து, பிறகு மர்மமான முறையில் வீழ்ந்த இந்த நகரம்தான் இந்தியாவின் முதல் நகர்ப்புற நாகரீகமாக இருக்கக்கூடும்.

இந்துத்துவவாதிகள் இந்திய வரலாற்றை மாற்றி எழுதுவதில் மிகத் தீவிரமாக இருக்கும் இந்தக் காலத்தில், அறிவியல் அதற்கு எதிர்த் திசையில் சென்றுகொண்டிருக்கிறது. அதாவது, ராகிகடி எலும்புக்கூட்டின் மரபணுவில் மரபணுக் குறியீடு R1a1 இல்லை. இந்த R1a1 குறியீடுதான் ஆரிய மரபணுக் குறியீடு என குறிக்கப்படுகிறது. இந்த மரபணுவானது 4000 ஆண்டுகளுக்கு முன்பாக கருங்கடலுக்கும் காஸ்பியன் கடலுக்கும் இடைப்பட்ட ஸ்டெப்பி புல்வெளி பகுதியிலிருந்து இந்தியாவுக்கு வந்த மக்களிடம் இருக்கும் மரபணுக் குறியீடு



இதுதான். இந்த மரபணுக் குறியீடு வட இந்தியர் களிடமும் வடக்கு ஐரோப்பியர்களிடமும் வலுவாகக் காணப்படுகிறது.

சிந்துச்சமவெளிப் பகுதியில் கிடைத்த ஒரே எலும்புக்கூட்டில் செய்யப்பட்ட இந்த ஆய்வில், R1a1 என்ற ஆரிய மரபணு குறியீடு இல்லை என்பதை வைத்து சில முடிவுகளை எட்டலாம். அதாவது சிந்துச் சமவெளி நாகரீகம் என்பது வேத கால நாகரீகத்திற்கு முந்தையது. தொடக்கக் கால சமஸ்கிருதத்தைப் பேசியவர் களின் மரபணுவிலிருந்து மாறுபட்டது. இந்த தொடக்கக் கால சமஸ்கிருதத்தைப் பேசியவர் களின் மரபணு குறியீடுகள் தற்போதைய வட இந்தியர் களிடம் பொதுவாகக் காணப்படுகின்றன.

அந்த காலகட்டத்தில், மத்திய ஆசியாவி லிருந்து பெரும் எண்ணிக்கையில் வந்தவர்கள், தெற்காசியாவின் மரபணு சித்திரத்தை மாற்றி அமைத்தார்கள் என்றாலும் பழங்கால ராகிகடி யில் வசித்தவர்கள், இந்த மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர்களோடு எந்தத் தொடர்பும் இன்றி இருந்திருக்கிறார்கள். அதாவது சிந்துவெளி மக்களின் மூதாதையர்களுக்கும் இந்த மத்திய ஆசிய (ஆரிய மரபணு கொண்ட) மனிதர் களுக்கும் எந்த தொடர்பும் இல்லை.

இஸ்லாமிய, ஐரோப்பிய நாட்டவர்கள் இங்கே வந்து ஆதிக்கம் செலுத்தினார்கள், நம் கலாச்சாரத்தை அழித்தார்கள் என்று அரசியல் முழக்கங்களை எழுப்புகிறவர்கள் இங்கே உண்டு. ஆனால், அவர்களது மரபணுப் பதிவுகளைவிட, ஸ்டெப்பி புல்வெளிக்காரர்களின் மரபணுப் பதிவு நம்மிடம் அதிகம் உள்ளது.

சரி, இந்த 4500 ஆண்டு பழமையான I 4411 என்பவர் யார்? “இந்த மனிதருக்கும் தென்னிந்தி யாவின் பழங்குடியின மக்களுக்கும் கூடுதல் தொடர்பிருக்கிறது” என்கிறார் மரபணு ஆராய்ச்சியாளர் ராய். அதாவது, தற்போதைய நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் இருளர்களின் மரபணுவோடு இது கூடுதலாக ஒத்துப் போகிறது. இந்த மனிதர்கள் ஆரம்பகால திராவிட மொழியைப் பேசியிருக்கக்கூடும்!!

இந்த ஆய்வு முடிவுகள் வேறு சில அதிர வைக்கும் உண்மைகளையும் சொல்கின்றன. அவை என்ன?

**இந்துத்துவவாதிகள் இந்திய வரலாற்றை மாற்றி எழுதுவதில் மிகத் தீவிரமாக இருக்கும் இந்தக் காலத்தில், அறிவியல் அதற்கு எதிர்த் திசையில் சென்று கொண்டிருக்கிறது.**

*சிந்துச் சமவெளி வரலாற்றை மாற்றி எழுத இந்துத்துவ சக்திகள் செய்த முயற்சி - இந்த ஆய்வுகளில் இன்னொரு விஷயமும் தெரிய வந்திருக்கிறது. அதாவது, இந்தியாவில் ஏற்கனவே வசித்தவர்களின் மரபணுக்களுடன் இந்தியத் துணைக் கண்டத்திற்கு வெளியில் இருந்து வந்தவர்களின் மரபணுக்களின் கலப்பும் ஏற்பட்டிருக்கிறது. வெளியிலிருந்து வந்த இவர்கள் இரானிய விவசாயிகள் என்று அழைக்கப்படுகிறார்கள்.*

*இதற்கு முன்பாக பழங்கால மரபணுக்கள் பரிசோதனை செய்யப்பட்டபோதும் இது உறுதிப்படுத்தப்பட்டது. இந்த காலகட்டத்தில் விவசாயத்தில் புதிய யுத்திகள் அறிமுகப் படுத்தப்பட்டன. அவை மேற்காசியாவுடன் ஏற்பட்ட தொடர்பாலேயே சாத்தியமாயின என்ற முந்தைய கருத்தாக்கத்திற்கும் இது வலுச் சேர்க்கிறது.*

*சிந்துச் சமவெளி நாகரீகம் முடிவுக்கு வரும் காலகட்டத்தில், யுரேசிய ஸ்டெப்பி புல்வெளிப் பகுதிகளிலிருந்து பெரும் தொகையான மக்கள் திரள் இந்தியாவில் குடியேறியது என்ற முந்தைய ஆய்வு முடிவை அஸ்திவாரமாக வைத்தே ராகிகடி ஆய்வு கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. ஸ்டெப்பி புல்வெளிகளிலிருந்து தெற்காசியாவுக்கு மட்டுமல்ல வட ஐரோப்பாவுக்கும் மக்கள் புலம் பெயர்ந்திருக்கிறார்கள். இவ்வகையான மக்கள் தொகை கலப்பே ஐரோப்பிய மொழிகளுக்கும் வட இந்திய மொழிகளுக்கும் இடையிலான உறவை விளக்கப் போதுமானது.*

*ஹரப்பாவில் நிலவிவந்த திராவிட நாகரீகம் முடிவை எட்டிய காலத்தில் ஸ்டெப்பி புல்வெளியிலிருந்து வேதகால மக்கள் குதிரை களில் வந்தேறினர் என பள்ளிக்கூடங்களில் படித்தவர்களுக்கு சமீபத்திய ஆய்வு முடிவு ஆச்சரியமளிக்காது.*

*ராகிகடி ஆய்வுகள் முடிந்த பிறகு, அந்த ஆய்வில் என்ன கிடைத்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ள பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. இதையொட்டி வழக்கம்போல பொய்க் கதைகளும் பரப்பப்பட்டன. இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்த ஆய்வின் மரபணு ஆராய்ச்சியில் பங்கேற்ற ராய் என்பவரைப் பேட்டியெடுத்ததாகவும் அவர், ராகிகடி மரபணுவுக்கும் வடஇந்திய பிராமணர்களின் மரபணுவுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறியதாகவும் ஒரு இந்தி நாளிதழ் பொய்யாக திரித்து செய்தி வெளியிட்டது. ஆக, இந்தோ - யுரேப்பியன் மொழிக் குடும்பம் என்பது இந்தியாவிலிருந்து தோன்றியது என்றது அந்த நாளிதழ். ஆனால், அப்படி ஆய்வில் ஏதும் இல்லை. அது ஒரு பொய்ச் செய்தி.*

*ராகிகடியிலிருந்து கிடைத்த ஜீன்களில் R1a1 - அதாவது ஆரிய மரபணு இல்லை என்பதுதான் இந்த ஒட்டுமொத்த ஆய்வும் சுட்டிக்காட்டும் ஒரு விஷயம். ஆனால், இந்துத்துவ வரலாற்றைப் பொறுத்தவரை, ஆரிய ஆக்கிரமிப்பு என்பது இல்லவேயில்லை, அதாவது ஆரியர்கள் வெளியிலிருந்து வர வில்லை என்று கூறப்படும் நிலையில் இந்த முடிவு அவர்களுக்கு மிகுந்த அதிர்ச்சியளிக்கக் கூடியது.*

*இந்துத்துவவாதிகள் சமீப காலமாக, சிந்துச் சமவெளி நாகரீகம் என்பது வேதகால நாகரீகம் என்று நிறுவும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். 2014ல் பா.ஜ.க. அரசு பெரும்பான்மையுடன் பதவியேற்ற பிறகு, இந்த இந்துத்துவ வரலாற்று முயற்சிகளுக்கு ஆதரவும் பணமும் தாராளமாக வாரி வழங்கப்படுகிறது.*

*மத்திய கலாச்சாரத் துறை அமைச்சரான மகேஷ் சர்மா இந்திய வரலாற்றைத் திருத்தி எழுதும் முயற்சியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார். 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரலாற்றுக் கமிட்டிக் கூட்டம் ஒன்றை ஆர்க்கியாலஜிகல் சர்வே ஆஃப் இந்தியாவின்*

இயக்குனர் ஜெனரல் அலுவலகத்தில் கூட்டினார். இந்தக் கமிட்டியின் தலைவர் கே.என். தீக்ஷித். அன்று நடத்தப்பட்ட கூட்டத்தின் நோக்கம், இந்தியாவின் பழங்கால வரலாற்றின் சில பகுதிகளைத் திருத்தி எழுதுவதற்கு ஏதுவாக ஒரு அறிக்கையை அளிக்கச் சொல்வது தான்.

அந்தக் கூட்டத்தின் குறிப்புகளில் பின்வரும் வாக்கியங்கள் இடம் பெற்றிருக் கின்றன: "அகழாய்வு முடிவுகள், மரபணு ஆய்வுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி தற்கால இந்துக்கள் என்பவர்கள், பல ஆயிரம் வருடங் களுக்கு முன்பாக இந்தி யாவில் வாழ்ந்தவர் களிலிருந்து வந்தவர்கள் என்று நிரூபிக்க வேண்டும். பழங்கால இந்து கதைகள் உண்மை யானவை, அவை வெறும் தொன்மங்கள் அல்ல என்று கூற வேண்டும்".

ஆனால், உண்மையான அறிவியல் ஆராய்ச்சி இதற்கு எதிரான திசையிலேயே ஆய்வுகளை எடுத்துச் சென்றது.

இந்த ஆய்வு முடிவுகளை வெளியிடுவது என்பது, அவ்வளவு எளிதான காரியமாக இல்லை.

ஹார்வர்டில் மக்கள் தொகை மரபணு ஆய்வாளரான டேவிட் ரெய்க் Who We Are and How We Got Here என்ற புத்தகத்தை எழுதியிருக் கிறார். அதில் இந்தியாவின் வட மேற்குப் பகுதியிலிருந்து யுரேசியர்கள் குடியேறி னார்கள் என்பதைச் சொல்வதே எவ்வளவு சிக்கலான காரியமாக இருந்தது என்று வியக்கிறார்.

பிறகு ஒரு வழியாக, 'மூடு மந்திரமாக' சில வார்த்தைகளைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சனை தீர்க்கப்பட்டதாம். அதாவது தென்னிந்தியர் களைக் குறிக்க 'Ancestral South Indian' (ASI) என்ற வார்த்தையும் வட இந்தியர்களைக் குறிக்க 'Ancestral North Indian' (ANI) வார்த்தையும் பயன் படுத்தப்பட்டது. பிறகு ஏஎன்ஐயிடம், இந்தியத் துணைக் கண்டத்திற்கு வெளியிலிருந்து வந்தவர் களின் மரபணுக்கள் இடம் பெற்றிருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டது. ஏஎன்ஐ என்பதற்குப் பதிலாக பழங்கால வட இந்தியர்கள் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தால் அவ்வளவுதான். நிலைமை மோசமாக இருந்திருக்கும்.

இதே பிரச்சனை தற்போதைய ஆய்வுக்கும் வந்தது. ரெய்க், அவரது அணியினர், ராகிகடியில் ஆய்வுசெய்தவர்கள் இணைந்து The Genomic Formation of South and Central Asia இதழில் ஒரு ஆய்வுக் கட்டுரையை பதிப்பித்தனர். இந்தக் கட்டுரையில் தெற்காசியாவிற்கு வெளியிலிருந்து புலம் பெயர்ந்து மக்கள் வந்தார்கள் என்ற வாக்கியம் வரக்கூடாது என ராகிகடியின் ஆய்வாளர் களில் ஒருவரான ஷிண்டே ரெய்க்கிடம் கூறினார். அதற்கு பதிலாக, இந்த இரு மக்கள் தொகைக்கும் (வட இந்தியர் - யுரேசியர்) இடையில் கலப்பு இருந்தது என்று வேண்டுமானால் கூறலாம் என்றார்.

ஆனால், இந்த ஆய்வு முடிவு ஏன் இவ்வளவு தாமதமாக வெளியிடப்பட்டது என்பது மர்மமாகவே இருக்கிறது. தாங்கள் சேகரித்த ஒரு மாதிரி மாசுபட்டதால் இந்தத் தாமதம் என அதிகாரபூர்வமாக காரணம் சொல்லப்படுகிறது. ஆனால், அரசியல் ரீதியாக அசௌகர்யமான உண்மைகளை இந்த ஆய்வு முடிவு சொல்லும் என்பதாலேயே தாமதம் ஆனதாக ஆய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், ஹார்வர்ட் அணியினர் பொறுமையிழந்து தங்கள் முன்னோட்ட அறிக்கையை வெளியிட்டு விட்டனர். இதற்குப் பிறகு, ஷிண்டே தன் ஆய்வின் முடிவுகளை சற்று அடக்கிவாசிக்க ஆரம்பித்தார். ராகிகடியில் இருந்தவர்கள் உள்ளூர் காரர்களைப் போலத் தான் இருந்திருப் பார்கள். தென்னிந்திய பழங்குடியின மக்களோடு சற்று தொடர்பிருந் திருக்கும் என்று அடக்கிப் பேச ஆரம்பித்தார்.

ஆனால், ஷிண்டே மட்டுமே இந்த முடிவுக்கு வர முடியுமா?



### புத்தரின் பார்ப்பனிய எதிர்ப்பை முன்வைக்கும் சில வரலாற்றுக் குறிப்புகள் (2)

# சீடர்களுடன் நடத்திய அறிவார்ந்த விவாதங்கள்

விடுதலை இராசேந்திரன்

***கடவுள் உலகைப் படைத்தார் என்றால், துன்பம் பேரிடருக்கு யார் காரணம்? பிராமணர் மட்டும் உயர்ந்தவன் என்றால், அந்த நம்பிக்கை ஏன் உலகம் முழுதும் இல்லாமல், இந்த தேசத்தில் மட்டும் இருக்கிறது என்று வாழ்வின் எதார்த்தங்களிலிருந்து வாதிட்டார் புத்தர்.***

“கடவுள் உண்டா இல்லையா என்பது பற்றி புத்தர் கவலைப்படாதவராக அது பயனற்ற வாதம் என்ற கருத்துடையவராக இருந்தாலும் அனைத்தையும் உருவாக்கி ஆட்டிப் படைக்கும் சக்தி ஒன்று உண்டு என்ற நம்பிக்கை புத்தரிடம் இருந்திருக்குமானால், அவர் போதித்த கருத்துகள் எல்லாம் தலைகீழாக வேறு திசையில் சென்றிருக்கும்” என்கிறார், தலைசிறந்த இந்திய தத்துவ ஆய்வாளர் தேவி பிரசாத் சட்டோ பாத்யாயா.

“அப்படி ஒரு ‘சக்தி’ இருக்கிறது என்ற நம்பிக்கையி லிருந்துதான் அந்தக் கடவுளை மகிழ்வித்தால் கருணை காட்டுவார் என்ற நம்பிக்கை உருவாகிறது; அந்த நம்பிக்கையில் தான் கடவுளை வேண்டுதல்; காணிக்கை செலுத்துதல்; பலியிடுதல் என்ற சடங்குகள் வந்தன. இறைவனை இவற்றின் வழியாக மகிழ்வித்து கருணையைப் பெற முடியும் என்ற நம்பிக்கை, புத்தர் காலத்திலும் இருந்தது. இவற்றில் நம்பிக்கை இல்லாத காரணத்தினால் தான் புத்தர் இந்த நம்பிக்கைகளை முற்றாக ஒதுக்கிவிட்டு மனிதனின் துயரத்துக்கு என்ன காரணம் என்பது குறித்து சிந்தித்தார். இல்லாவிட்டால் துயரத்துக்கும் மகிழ்ச்சிக்கும் காரணம் கடவுள் என்று கூறி கடவுளை

அடையும் வழிமுறைகளைத்தான் புத்தரும் பேசியிருப்பார். ஆனால் புத்தர் அப்படி சிந்திக்காமல் துயரத்துக்குக் காரணங்களைக் கண்டறியவே முற்பட்டார்" என்கிறார் சட்டோ பாத்யாயா. புத்தர் வாழ்ந்த காலத்தில் அவரது கருத்துகள் எதுவும் பதிவாகவில்லை. புத்தர் காலத்துக்குப் பிறகு அஸ்வகோசர் தனது நினைவிலிருந்து புத்தர் கருத்துகளை 'புத்த சரிதத்தில்' பதிவு செய்தார். புத்தரின் கருத்துகளாக அஸ்வகோசர் முன் வைத்திருக்கும் தத்துவங்கள் - புத்தர் ஒரு முழுமையான நாத்திகர் என்பதையே உறுதிப்படுத்துகின்றன.

இவ்வுலகம் கடவுளால் படைக்கப்பட்டது என்றால், தூய்மை; தூய்மையற்ற எல்லா பொருள்களும் அவனிடமிருந்தே வந்திருக்க வேண்டும். அப்படியானால், கடவுளால் அனுப்பி வைக்கப்பட்ட அனைத்திலும் மாற்றமோ, அழிவோ நடந்திருக்கக் கூடாது. துன்பம், இயற்கைப் பேரிடர் ஏதும் நிகழ்ந்திருக்கக் கூடாது. சரி; தவறு என்று எதுவும் இருக்க முடியாது.........

ஒரு உயிருக்கு இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு அனைத்தும் இறைவனின் கொடை என்றால், இறைவனுக்கும் அந்த உணர்வுகள் இருந்திருக்கத்தான் வேண்டும். அப்படியானால் அவனை குணங்களற்றவன் என்று எப்படி கூற முடியும்?

கடவுள் மனிதனைப் படைத்தார்; எனவே கடவுள் ஆணையை ஏற்பதைத் தவிர, உயிர்களுக்கு வேறு வழியில்லை என்றால், ஒரு மனிதனுக்கு நல்ல குணங்களே வேண்டும். அவை மட்டுமே உயர்வானது என்று ஏன் சிறப்பிக்க வேண்டும்? அனைத்தும் அவன் செயல் என்றால் நல்லது, கெட்டது என்பதற் கெல்லாம் இடம் ஏது? இந்த குணங்கள் அனைத்தும் கடவுளுக்கும் உரியதாக ஆகிவிடு மல்லவா?

துன்ப, துயரங்களுக்கு எல்லாம் கடவுள் காரணமில்லை என்று கூறினால், அதற்குக் காரணம் யார்? அதற்கெல்லாம் கடவுளைத் தவிர்த்த வேறு காரணங்கள் உண்டு என்றால், கடவுளைத் தவிர்த்து, அவன் சக்திக்கு உட்படாதவைகள் உண்டு என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். கடவுளுக்கே தொடர்பில்லாதவைக்கு கடவுள் காரணம் இல்லை என்பதையும் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

உலகைப் படைத்தவர் கடவுள் என்றால், அவர் படைத்ததற்கு ஒரு நோக்கம் இருந்தாக வேண்டும். அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறும்போது கடவுளுக்கு ஒரு மனநிறைவு கிடைக்கும். முழுமையான நோக்கம் நிறைவேறாதபோது கடவுள், 'பூரணத்துவம்' பெற்றவர் என்று எப்படி கூற முடியும்? சரி; நோக்கம் ஏதுமின்றியே கடவுள் உலகைப் படைத்தார் என்றால், அந்தக் கடவுள் பைத்தியக்காரனாகவோ அல்லது பால் உறிஞ்சும் பச்சைக் குழந்தையாகவோ தான் இருக்க முடியும்.

அப்படியே படைத்திருந்தாலும் அது ஒரே கடவுளாகத்தானே இருக்க முடியும்? ஒன்றுக்கு மேற்பட்ட கடவுள்கள் எப்படி வந்தன?"

- என்று கடவுள் இருப்பையே கேள்விக் குள்ளாக்கியிருக்கிறார் புத்தர்.

'அநாதபிண்டிகர் என்பவர் ஆசிரமத்தில் புத்தர் தங்கியிருந்தபோது ஆசுவலாயனன் என்ற பார்ப்பன இளைஞன், புத்தருடன் வாதம் செய்கிறான். அந்த விவாதம் மிகவும் சுவையானது:

"**ஆசுவலாயனன் :** கவுதமரே! பிராமண வருணமே உயர்ந்தது. மற்ற வருணங்கள் தாழ்ந்தவை. பிராமண வருணம் வெண்மையானது. மற்றவை கருப்பானவை. பிராமணர்களுக்கே முக்தி கிடைக்கிறது. மற்றவர்களுக்கு அல்ல. பிராமணர்கள் பிரம்மதேவனுடைய முகத்திலிருந்து உண்டானவர்கள். அவர்கள் அவனுடைய சொந்தப் பிள்ளைகள். எனவே, அவர்கள்தாம் அவனுடைய செல்வத்துக்கு உரிமையானவர்கள் என்று பிராமணர்கள் கூறுகிறார்களே, இதைப் பற்றி உங்கள் கருத்து யாது?

**புத்தர் :** ஆசுவலாயனா! பிராமணர்களின் மனைவியர் பூப்படைகிறார்கள், கருத்தரிக்கிறார்கள், மகவை ஈனுகிறார்கள், குழந்தைகளுக்குப் பாலூட்டுகிறார்கள். இப்படியாக அந்தணரின் சந்ததியர் பிற வருணத்தவரைப் போலவே தாய் வயிற்றிலிருந்து பிறந்திருக்க, பிரம்மதேவனுடைய முகத்திலிருந்து

தோன்றியதாகக் கூறிக் கொள்வது வியப்பாக இல்லையா?

**ஆசுவலாயனன் :** கவுதமரே! தாங்கள் எப்படி வேண்டுமானாலும் சொல்லுங்கள். ஆனால், பிராமணர்கள் தாங்கள் பிரம்ம தேவனுடைய செல்வத்துக்கு உரியவர்கள் என்பதில் முழு நம்பிக்கை கொண்டிருக் கிறார்கள்.

**புத்தர்:** ஆசுவலாயனா! யவனம், காம் போஜம் முதலிய எல்லை நாடுகளில் ஆரியர், தாசர் என்ற இரண்டே வருணங்கள் உண்டு. சில சமயம் ஆரியன் தாசனாவான், தாசன் ஆரியனா வான். இதை நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?

**ஆசுவலாயனன்:** ஆம், கவுதமரே! கேள்விப் பட்டிருக்கிறேன்.

**புத்தர்:** அப்படியிருக்கையில், பிரம்ம தேவன் 'பிராமணர்களை' முகத்திலிருந்து உண்டாக்கினான், அவர்கள் உயர்ந்தவர்கள் என்பதற்கு ஆதாரம் என்ன?"

**அக்கினியில் வேறுபாடு உண்டோ?**

தங்களுக்குத் தாங்களே எழுதிக்கொண்ட ரிக் வேதத்தின் புருஷ சூக்தத்தை ஆதாரமாகக் கொண்டே 'பிராமணர்கள்' பிரம்மனின் முகத்திலிருந்து உதித்தவர்கள் எனும் நம்பிக்கை கட்டமைக்கப்பட்டது. இதற்கு எதிராக வாழ்வின் யதார்த்தங்களை ஆதாரமாக வைத்தார் புத்தர். பிராமணர்கள் மிக உயர்ந்தவர்கள் என்றால் அந்த நம்பிக்கை இந்த தேசத்தில் மட்டும் நிலவுவது ஏன்? பக்கத்து நாடுகளில் அது இல்லாதது ஏன்? இதிலிருந்தே பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிப்பது முறையற்றது என்பது தெளிவாகிறது என்பதே புத்தரின் வாதம். அப்படியும் இதை ஏற்கவில்லை. ஆசுவலாயனன் அவன் சொன்னதையே சொன்னான்.

**ஆசுவலாயனன் :** கவுதமரே! தாங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். 'பிராமணர்கள்' தங்களை உயர்வாகவும் மற்ற வருணத்தவரைத் தாழ்வாகவும் கருதுகிறார்கள் என்பது உண்மை.

**புத்தர் :** ஆசுவலாயனா! அரசன் ஒருவன் பிராமணர்களையும் க்ஷத்திரியர்களையும் பார்த்து 'சால மரம் அல்லது சந்தன மரம் போன்ற உயர்ந்த மரங்களைக் கடைக் கோலாகக் கொண்டு தீயை உண்டாக்குங்கள்' என்றான். புலையர், வேடர் உள்ளிட்டவர்களைப் பார்த்து, 'நாய்க்கும் பன்றிக்கும் தீனி வைக்கும் பாண்டத் திலும், சாயம் தோய்க்கும் பாண்டத்திலும் ஆமணக்கைக் கொண்டு தீயை உண்டாக்குங்கள்' என்றான். ஆசுவலாயனா! அப்போது பிராமணர் முதலியோர் உண்டாக்கிய அக்கினி மட்டுமே ஒளிரும், புலையர் முதலியோர் உண்டாக்கிய அக்கினி ஒளிராது என்று உனக்குத் தோன்று கிறதா?

**ஆசுவலாயனன் :** கவுதமரே! அக்கினி ஒரே மாதிரிதான் ஒளிரும். எங்கும் ஒரே மாதிரி யாகவே அக்கினி காரியம் நடக்கும்" என்று ஒப்புக் கொண்டான் ஆசுவலாயனன்.

புத்தர் மகத்தான தத்துவஞானி மட்டுமல்ல, ஓர் அருமையான இலக்கியவாதியும் கூட. எளிமையான, அழகான, கச்சிதமான உவமைகளைப் பயன்படுத்தியிருக்கிறார் பல இடங்களில். ஒரு மாபெரும் மக்கள் தலைவராக இவர் பரிணமித்ததற்கு அவருக்குள்ளிருந்த கவித்துவ ஆற்றலும் ஒரு முக்கிய காரணமாகும்.

எதைக் கொண்டு உருவாக்கப்பட்டாலும் தீ, தீதான். எத்தகைய மனிதர்களுக்குப் பிறந்தா லும், மனிதன், மனிதன்தான். அதில் வேறுபாடு இருக்க முடியாது. பிறப்பின் அடிப் படையில் பாகுபாடு காட்டக் கூடாது. இதை இன்னும் பட்டவர்த்தனமாகச் சொன்னார் புத்தர்.

**"புத்தர் :** ஒரு க்ஷத்திரியப் பிள்ளை பிராமணப் பெண்ணை மணந்து கொண்டால், அந்தத் தொடர்பினால் அவனுக்குப் பிறக்கும் மகன் தாய் தந்தையைப் போலவே மனிதனாக இருப்பானா இல்லையா? 'பிராமண'ப் பிள்ளை ஒருவன் க்ஷத்திரியப் பெண்ணை மணந்தால், அந்தத் தொடர்பினால் பிறக்கும் மகன், தாய் தந்தையரைப் போலவே மனிதனாக இருப்பானா இல்லையா?

**ஆசுவலாயனன் :** இத்தகையக் கலப்பு மணத்தினால் பிறக்கும் மகன் தாய் தந்தையரைப் போல மனிதனாகவே இருப்பான். கவுதமரே!

அவனை பிராமணர் என்றும் சொல்லலாம், க்ஷத்திரியன் என்றும் சொல்லலாம்.

***புத்தர்:*** *ஆனால் ஆசுவலாயனா! ஒரு பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் தொடர்பு ஏற்பட்டு ஒரு குட்டி பிறந்தால் அது தாயைப் போல இருக்குமா? தகப்பனைப் போல் இருக்குமா? அதைக் குதிரை என்று சொல்ல முடியுமா? கழுதை என்று சொல்ல முடியுமா?*

**ஆசுவலாயனன் :** *கவுதமரே! அதைக் குதிரை என்றோ, கழுதை என்றோ சொல்ல முடியாது. அது மூன்றாவது இனம் ஒன்றைச் சேர்ந்த பிராணி. அதைக் கோவேறுக் கழுதை என்கிறோம். ஆனால், பிராமணருக்கும் க்ஷத்திரி யருக்கும் உண்டான கலப்பினால் பிறந்த குழந்தையிடம் இத்தகைய மாறுதல் இருப்பதில்லை.''*

வருண வேறுபாடு செயற்கையானது. அது இருவகை உயிரினங்களுக்கும் இடையிலான இயற்கையான வேறுபாடு அல்ல. அதனால் தான் வருணக் கலப்பால் பிறக்கும் பிள்ளை மனிதனாக இருக்கிறது. யதார்த்த உண்மை இப்படியிருக்கும் போது வருணத்தின் பேரில் உயர்வு தாழ்வு கற்பிக்க முடியாது என்று ஆணித்தரமாக வாதிட்டார் புத்தர். இன்றைக்குக்கூட இப்படி வாதாடப் பலரும் தயங்குவார்கள். அந்த ஞானியோ 2500 ஆண்டுகளுக்கு முன்பே இப்படி அஞ்சாமல் வாதாடினார்.

ஆனாலும்கூட புத்தர் ஒரு தவறு செய்து விட்டார்

புத்த மார்க்கம் பார்ப்பனர்களையும் ஏற்றுக் கொண்டதால் அதற்கான கடும் விலையை அது தர வேண்டியிருந்தது. புத்த மார்க்கப் புரட்சியால் யாகம், சடங்குகளின் செல்வாக்குகள் வெகுவாகக் குறைந்து விட்டதால் வருமானமில்லாத நிலையில் பல பார்ப்பனர்கள், பார்ப்பன உணர்வுகளைவிட்டு விடாமலேயே புத்த மார்க்கத்தில் இணைந்துக் கொண்டனர். புத்த பிட்சுக்களாக உருவாக்கப்பட்ட 'ஆஸ்ரமங்களில்' அவர்கள் சுகவாழ்வு வாழத் தொடங்கினர். பிற்காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியில் அதிகார மய்யங்களைப் பார்ப்பனர்கள் தங்கள் வசமாக்கிக் கொண்ட

**மகாயான பவுத்தப் பிரிவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் ஆந்திராவைச் சார்ந்த நாகார்ஜுனன் என்ற பார்ப்பனர் உருவாக்கினார். மகாயானப் பவுத்தப் பிரிவு தோன்றியதற்குப் பிறகு ஏனைய பவுத்தப் பிரிவினரை அது விழுங்கிக் காணாமல் போகச் செய்துவிட்டது.**

அதே கதைதான். புத்த பிட்சுவாக மாறிய பிறகும் பார்ப்பனர்கள் தங்கள் 'தீண்டாமை'யை விட்டு விடவில்லை என்பதை சீனப் பயணியாக இந்தியாவுக்கு வந்த ஃபாஹியான் தனது பயணக் குறிப்பில் பதிவு செய்திருக்கிறார்.

"புத்த மார்க்கத்தைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்த ஒரு பார்ப்பன புத்த பிக்கு பாடலிபுத்திரத்தில் இருந்தார். மன்னர் அவரைச் சந்திக்கச் செல்லும்போது குருவின் கைகளைத் தொட்டு வணங்குவார். உடனே அந்த 'பார்ப்பன பிக்கு' தலைமுதல் பாதம் வரை தண்ணீரில் தேய்த்து குளிப்பது வழக்கம்'' என்று குறிப்பிடுகிறார். கட்டுப்பாடு பாடலிபுரத்தில் இருந்தவரை புத்தமார்க்கம் கொள்கைக் கட்டுபாடுடனேயே இருந்தது. ஊடுருவிய பார்ப்பனர்களால் எந்த மாற்றமும் செய்ய முடியவில்லை வெளி நாட்டினர் ஏராளமாக வரத் தொடங்கி அவர்கள் புத்த மார்க்கத்தில் சேர்ந்து ஆஸ்ரமங்களைக் கைப்பற்றிய பிறகுதான் பார்ப்பனர்கள் புரோகித மந்திர தந்திரங்களை புத்த மார்க்கத்தின் தவிர்க்க முடியாத அம்சமாக மாற்றிவிட்டனர். பவுத்தப் பேரரசுகளின் அதிகாரம் குன்றி வெளி நாட்டினர் இந்தியாவுக்கு வந்து அரசாட்சியைக் கைப்பற்றிய வுடன் பார்ப்பனர்கள் புத்தமதத்தை இரண்டாகப் பிளந்து புத்தரை கடவுளாக்கி யாக சடங்குகளைப் புகுத்தி விட்டனர் என்று ஹேவல், ஆர்.சி.தத் போன்ற வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

பார்ப்பனர்களின் தலைமையில் உருவானதுதான் 'மகாயான பவுத்தம்', அதன்

**உலகத்தை 'மாயை', 'உண்மையற்றது' என்று கூறிய சங்கரரின் அத்வைதம், 'புத்த மார்க்கத்தை' மட்டும் 'மாயை' என்ற பார்வையில் பார்க்காமல் அதை அழிக்கப்பட வேண்டிய அமைப்பாகப் பார்த்து அழித்து ஒழித்தது.**

வழியாக புத்தரும் காளி தேவியும் ஒன்றுதான் என்று பிரச்சாரம் செய்யத் தொடங்கி விட்டனர். புத்தமார்க்கம் இரண்டாகப் பிளவுபட்டது வைசாலி என்ற பகுதியில் தான்.

புத்தரின் மரணத்துக்கு 8 ஆண்டுகளுக்கு முன்பு அவரது உண்மையான சீடர்கள் சதவானி என்ற மலைக்குகை வாயிலில் முதல் பவுத்தப் பேரவையை கூட்டினார்கள். புத்தரின் அனைத்து கோட்பாடு களையும் முறையாக மூன்று பிரிவுகளாக தொகுத்து ஒழுங்குபடுத்தி, 'திரிபீடகம்' என்று அதற்கு பெயரிட்டார்கள். பீடகம் என்றால் பிரிவு என்று பொருள். இந்த 'திரிபீடகம்' எழுத்து வடிவில் தொகுக்கப்பட வில்லை என்பது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அதற்குப் பிறகு 100 ஆண்டுகள் கழித்து தான் இரண்டாம் பவுத்தப் பேரவை வைசாலி யில் கூடியது. புத்தர் அப்போது உயிருடன் இல்லை. அப்போது புத்த துறவிகளுக்கான விதிமுறைகளை மாற்றுவது என முடிடுத்து பத்து மாற்றங்களை ஊடுருவிய பார்ப்பனர்கள் செய்தார்கள். புத்தர் கூறிய சங்கத்துக்கான விதிமுறைகளை கட்டாயம் ஏற்க வேண்டிய அவசியமில்லை என்பதும், தங்கம், வெள்ளி போன்ற விலை மதிப்பு மிக்க பொருள்களை தானமாகப் பெறக் கூடாது என்ற விதியை மாற்றி தானமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்பதும் மாற்றப்பட்ட திருத்தங்களில் அடங்கும்.

தலைமை தாங்கிய புத்த துறவி ரேவதர், இந்த திருத்தங்கள் புத்தரின் கொள்கைகளுக்கு எதிரானது என்று ஏற்க மறுத்தார். 'வஜ்ஜியத் துறவிகள்' என்று அழைக்கப்பட்ட பார்ப்பனத் துறவிகள் பேரவையி லிருந்து வெளியேறி தனிப் பிரிவாக செயல்படத் தொடங்கினர். வைசாலியில் புத்த மார்க்கம் இரண்டாகப் பிளவுபட்டது. அடுத்த 400 ஆண்டுகளில் பவுத்தம் 108 பிரிவுகளாக சிதறியது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதில் 18 பவுத்தப் பிரிவுகள் பற்றிய குறிப்புகள் மட்டும் இருக்கின்றன. இதில் மகாயான பவுத்தப் பிரிவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் ஆந்திராவைச் சார்ந்த நாகார்ஜுனன் என்ற பார்ப்பனர் உருவாக்கினார். மகாயானப் பவுத்தப் பிரிவு தோன்றியதற்குப் பிறகு ஏனைய பவுத்தப் பிரிவினரை அது விழுங்கிக் காணாமல் போகச் செய்துவிட்டது. நாகார்ஜுனன் முன் வைத்த 'மாயாவாதம்' என்ற தத்துவம் புத்தரின் பொருளிய நாத்திகத்துக்கு முற்றிலும் எதிரானது என்கிறார் ஆய்வாளர் தேவி சட்டோபாத்யாயா.

"உலகத்தை கடவுள் படைத்தார்; அல்லது கடவுளால் உலகம் படைக்கப்படவில்லை" என்ற முரண்பாட்டு தர்க்கத்தை நாகார்ஜுனன் குழப்பி, நாத்திகம் பேசும் பாவனையோடு தெளிவற்ற நிலைக்குக் கொண்டு சென்று விடுவதை சட்டோபாத்யாயா சுட்டிக் காட்டுகிறார். அவரது மொழியிலேயே கூற வேண்டுமானால், "நாகார்ஜுனரைப் பொறுத்தவரை முரண்பாட்டு விதி என்பது கழைக் கூத்தாடியின் வெற்று வித்தையைப் போன்றது. தனது மாயா ஜாலத்தின் மூலம் யாதொன்றையும் கணப்பொழு துக்கு நம் கண்களிலிருந்து மறைத்திடும் கழைக் கூத்தாடியைப்போல, புலனறிவுக்கு உட்படுகிற உண்மைகள் அனைத்தையும் நாகார்ஜுனன் சூன்யத்துக்குள் தள்ளி விடுகிறார். அவரின் இந்த மாயாவாதம் - தத்துவக் கண்ணோட்டத்தில் மிகவும் ஆபத்தானது" என்கிறார். புத்தரின் கருத்துகள் சிதைக்கப்பட்டது மட்டுமல்ல, புத்தமார்க்கமும் சிதைக்கப்பட்டது.

ஒடுக்கப்பட்ட மக்களின் புகலிடமாக புத்தர் காலத்தில் இருந்த புத்த மடங்கள் சொகுசு மடங் களாகி, புத்தரின்கோட்பாடுகள் அனைத்துக்கும் எதிரானதாக மாறிப் போனது என்கிறார் ஆய்வாளர் ரொமிலா தாப்பர். ஆதரவற்ற ஏழைகள் படும் துயரத்துக்கான காரணம் அவர்கள் முற்பிறவியில் செய்த

தீமைகள் என்றும் நியாயப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். பவுத்தத்தைப் பின்பற்றிய அசோகர் சமூகப் புரட்சியை முன்னெடுப்பதில் ஓரளவுதான் வெற்றி பெற்றார். பார்ப்பனர்களின் கொட்டங்கள் அசோகர் காலத்திலேயே தொடங்கி விட்டன. அவர்களை அசோகர் அடக்கத் தவறி விட்டார். அனைவரையும் அரவணைத்துப் போக வேண்டும் என்ற அவரது அன்பு உள்ளமே கொள்கைத் தோல்வியில் முடிந்தது என்கிறார் ஆய்வாளர் ரைஸ்டேவிட்ஸ். அசோகர் மறைந்த 40 ஆண்டுகளுக்குள் வரலாற்றின் பொற்காலம் என்று அம்பேத்கர் வர்ணிக்கும் மவுரிய ஆட்சியும் முடிவுக்கு வந்தது.

பவுத்த மதம் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும். வேதம் மீண்டும் அரியணையில் ஏற்றப்பட வேண்டும் என்று முடிவெடுத்த பார்ப்பனர்கள், கடவுள் மறுப்புக் கொள்கையாளர்களின் சிந்தனைகள் நூல்களை எல்லாம் முற்றாக அழிக்கும் வேலைகளைத் தொடங்கினர். சட்டோத்யாயா வேதனையுடன் இவ்வாறு கூறுகிறார்: “கடவுளை மறுத்த லோகாயதவாதிகளின் உன்னதமான படைப் பிலக்கியங்களை மூலப் படிகளை மீட்கவே முடியாதவாறு அழிக்கப்பட்டுவிட்டன. துண்டு துண்டாக வெட்டப்பட்ட சில பகுதிகள் தான் கிடைக்கின்றன. அவைகள்கூட லோகயாதத்தை எதிர்த்தவர்கள் நூல்களிலிருந்துதான் கண்டறிய முடிகிறது” என்கிறார்.

மவுரிய வம்சத்துக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த புஷ்யமித்திர சுங்கன் என்ற சுங்க வம்சத்தைச் சார்ந்த பார்ப்பனன், அசோகர் நிறுவிய 84000 தூண்களை (புத்தர் பொன்மொழிகளைக் கொண்டவை) இடித்துத் தரைமட்டமாக்கினான். பார்ப்பனர்களும் களத்தில் இறங்கினார்கள். புத்த மடாலயங்களை தரைமட்டமாக்கி புத்த பிக்குகளையும் கொன்று ஒழித்தார்கள். இந்த கொடூரமான வரலாறுகள் மிகவும் விரிவானவை.

புத்த மதத்தில் ஊடுருவிய பார்ப்பனியம் அதை மெல்ல வலுவிலக்கச் செய்து கொண்டிருந்த சமூகச் சூழலில் கி.பி.8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கேரள பார்ப்பனர் சங்கரர், பார்ப்பனியத்துக்கு புத்துயிரூட்ட ‘அத்வைதம்’ என்ற தத்துவத்தை முன் வைத்தார். பார்ப்பனியத்தை உறுதிப்படுத்தி ‘நான்கு வர்ண’ சமூகத்தை மேலும் வலிமைப்படுத்துவதே அதன் நோக்கமாக இருந்தது. உலகத்தை ‘மாயை’, ‘உண்மையற்றது’ என்று கூறிய சங்கரரின் அத்வைதம், ‘புத்த மார்க்கத்தை’ மட்டும் ‘மாயை’ என்ற பார்வையில் பார்க்காமல் அதை அழிக்கப்பட வேண்டிய அமைப்பாகப் பார்த்து அழித்து ஒழித்தது. சங்கரர் ஈவிரக்கமின்றி செயல்பட்டதை வரலாற்றாளர்கள் குறிப்பிடுகிறார்கள். புத்தரின் கொள்கைகளைப் பரப்ப, ‘புத்த மடாலயங்கள்’ ஏற்படுத்தியதை அப்படியே பின்பற்றிய சங்கரர், வடக்கே பத்ரிநாத், மேற்கே துவாரகை, கிழக்கே பூரி, தெற்கே சிருங்கேரி என்ற மடங்களை நிறுவினார். (காஞ்சிபுரம் சங்கர மடம், உண்மையில் சங்கரர் நிறுவியதுஅல்ல. சங்கரர் நிறுவியதாகக் கூறிக் கொண்ட மோசடி மடம்) ‘சூத்திரர்கள் வேதம் படிக்கவோ, யாகம் செய்யவோ உரிமையில்லை’ என்றார் சங்கரர். மக்கள் தொகையில் பெரும் பான்மையாக இருந்த ‘சூத்திரர்கள்’ கல்வி அறிவற்றவர் களாகவே முடங்கவேண்டும் என்ற ‘காருண்யமிக்க’வர்களாகவே சங்கரர்கள் இருந்தார்கள்.

புத்த மார்க்கத்தில் ஊடுருவி, அதன் கொள்கை களை சிதைத்த பார்ப்பனர்கள், கடைசியில் புத்தரை ‘விஷ்ணு’வின் 10 அவதாரங்களில் 9ஆவது அவதாரமாக அறிவித்து விட்டனர். கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு எழுதப்பட்ட மச்ச புராண சுலோகம் விவரிக்கும் பத்து அவதாரங்களில் “ராமோ ரமகோ கிருஸ்ணங்கா - **‘புத்தா’** கல்கி இதிகா க்ரம்திஹ்” - என்று எழுதி புத்தரையும் அவதாரமாக்கி விட்டது.

வரலாற்றில் பார்ப்பனக் கொடுங் கோன்மையை எதிர்த்தவர்கள் அழிக்கப்பட்டார்கள்; வீழ்த்தப் பட்டார்கள் இன்று வரை ‘உயிரோடு’ நிலைத்து நிற்பது பெரியார் மட்டும் தான்.

பெரியாரியத்தின் தூதுவர்களாக நாம் களத்தில் நிற்கிறோம். ●

# பட்டியல் இனப் பிரிவு இட ஒதுக்கீட்டில் கிரிமிலேயர்

***உச்சநீதிமன்றப் பட்டியல் இனப் பிரிவினரை தீர்மானிப்பதில் முதன்முறையாக 'கிரிமிலேயரை'ப் புகுத்தி ஆபத்தான தீர்ப்பை வழங்கியிருக்கிறது உச்சநீதிமன்றம். உச்சநீதி மன்றத் தீர்ப்பை வரவேற்ற தமிழ்நாட்டுத் தலைவர்கள் இதை கவனத்தில் கொள்ள வில்லை.***

பட்டியல் இனப் பிரிவினர் மற்றும் பழங்குடியினருக்கான பதவிகளில் பதவி உயர்வு நிலையிலும் இடஒதுக்கீடு வழங்குவது குறித்து உச்சநீதிமன்றத்தின் அய்ந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு அளித்துள்ள தீர்ப்பு - சமூக நீதிக்கு பெரும் பின்னடைவாகும். செப். 26ஆம் தேதி தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான அமர்வு - பட்டியல் இனப் பிரிவு மற்றும் பழங்குடி மக்களுக்கு பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வழங்க முடியும் என்று தீர்ப்பளித்தது உண்மைதான்; ஆனால், 'கிரிமிலேயர்' எனும் வடிகட்டும் முறையை அதில் புகுத்தி, தீர்ப்பின் நோக்கத்தையே கெடுத்துவிட்டது. அது மட்டுமின்றி, பதவி உயர்வில் இடஒதுக்கீட்டை வழங்குவதா வேண்டாமா என்பதை அந்தந்த மாநிலங்களே முடிவு செய்து கொள்ளலாம் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகக் குரல் கொடுக்கும் தலைவர்கள்கூட இத்தீர்ப்பை சரியான புரிதலின்றி வரவேற்றுள்ளார்கள். இதில் அடங்கியுள்ள ஆபத்துகளை அவர்கள் உணரவில்லை.

பிற்படுத்தப்பட்டப் பிரிவினருக்கு மட்டுமே மத்திய அரசு 'கிரிமிலேயர்' என்ற பொருளாதார வரம்பைப் பின்பற்றி வருகிறது. இடஒதுக்கீட்டுக் கொள்கையை எதிர்ப்பவர்கள் 1970ஆம் ஆண்டில் தொடங்கி இந்த 'கிரிமிலேயர்' முறையை வற்புறுத்தி வருகிறார்கள். 1992ஆம் ஆண்டு - மண்டல் பரிந்துரைக்கு எதிரான பிரபலமான 'இந்திரா சகானி - எதிர் இந்திய ஒன்றிய' வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு, பிற்படுத்தப்பட்டோரை வரையறுக்க 11 காரணிகளின் அடிப்படையை வகுத்து கிரிமிலேயரைப் புகுத்தியது. ஆனால் பட்டியல் மற்றும் பழங்குடி இனப் பிரிவுக்கு 'கிரிமிலேயர்' பொருந்தாது என்றும் கூறியது. அதே நேரத்தில் இந்தப் பிரிவினருக்கு பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்கவும் முடியாது என்றும் தீர்ப்பளித்தது. இப்போது தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு முதன்முதலாக 'கிரிமிலேயரை' உச்சநீதிமன்றம் புகுத்தியுள்ளது. அது மட்டுமன்றி மாநிலங்களுக்கு இதில் முடிவு எடுக்கும் உரிமைகளை வழங்கியிருப்பதால் இடஒதுக்கீடு கொள்கையில் ஆர்வம் இல்லாத ஆட்சிகள், கொள்கைகளை மாற்றிக் கொள்ளவும் வாய்ப்புள்ளது. உதாரணமாக உ.பி.யில் மாயாவதி முதல்வராக இருந்தபோது பகுஜன் சமாஜ்வாடி கட்சி ஆட்சியில் பட்டியல் இனப் பிரிவினருக்கு பதவி உயர்வில் இட

ஒதுக்கீடு வழங்கப்பட்டது. பிறகு சமாஜ்வாடி கட்சிஆட்சிக்கு வந்தவுடன் அலகாபாத் உயர்நீதிமன்றம் மாயாவதி பிறப்பித்த உத்தரவை நீக்கம் செய்த நிலையில், பதவி உயர்வு வழங்கப்பட்ட பட்டியல் இனப் பிரிவினரின் பதவி உயர்வைப் பறித்து உத்தரவிட்டது. சட்டத்தைத் திருத்தி பதவி உயர்வு வழங்கத் தயாராக இல்லை. கடந்த ஜூலை 23ஆம் தேதி, பீகார் மாநில அரசு பட்டியல் இனப் பிரிவினருக்கு பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்கும் உத்தரவைப் பிறப்பித்துள்ளது. ஆனால் கருநாடக அரசு 4000 பேருக்கு இடஒதுக்கீடு அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய பதவி உயர்வை வழங்காமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது.

இப்படி நிலைமை மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகிறது. மாநில ஆட்சிகள் பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்கும்போது அவர்கள் பின்தங்கிய நிலையில் தான் இருக்கிறார்கள் என்பதற்கான தரவுகளை சேகரிக்க வேண்டும். அத்துடன் போதுமான பிரதிநிதித்துவம் வேலை வாய்ப்பில் கிடைக்கப் பெறவில்லை என்பதையும் உறுதி செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளையும் இப்போது உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் அறிவுறுத்தியுள்ளது.

குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர், உச்சநீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள், மத்திய தேர்வாணைய உறுப்பினர்கள், குரூப் ஏ, பி மற்றும் முதல்நிலை, இரண்டாம் நிலை அதிகாரிகள், டாக்டர்கள், பல் டாக்டர்கள், பொறியாளர்கள், சார்ட்டட் அக்கவுண்டன்ட் எனும் தணிக்கை ஆய்வாளர்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவன ஆலோசகர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், விளையாட்டுத் துறையினர் ஆகியோர் குடும்பப் பிள்ளைகள், பட்டியல் இனப் பிரிவுக்குள் வர மாட்டார்கள் என்றும், எனவே பதவி உயர்வுக்கான தகுதியை இழப்பார்கள் என்றும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு கூறுகிறது.

இந்தக் காரணிகளைப் பின்பற்ற வேண்டும் என்று கூறும்போது ஒரு கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கிறது. "உச்சநீதிமன்றத்திலோ உயர்நீதிமன்றத்திலோ, தலித் நீதிபதிகள் எவ்வளவு எண்ணிக்கையில் இருக்கிறார்கள்? உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக கே.ஜி. பாலகிருஷ்ணன் என்ற ஒரு தலித் மட்டுமே இருந்துள்ளார். 2010ஆம் ஆண்டில் அவர் ஓய்வு பெற்ற பிறகு, ஒரு தலித் நீதிபதிகூட உச்சநீதி மன்றத்துக்கு வர முடியவில்லை. 24 உயர்நீதி மன்றங்களில் ஒரு தலித்கூட தலைமை நீதிபதியாக இல்லை.

2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பட்டியல் இனப் பிரிவினர் 25 சதவீதம்; ஆனாலும் தேசிய அளவில் இந்தப் பிரிவைச் சார்ந்தவர்களில் எத்தனைபேர் அய்.ஏ.எஸ்.களாக இருக்கின்றனர்; எத்தனை அய்.ஏ.எஸ். அதிகாரிகளின் பிள்ளைகள் அய்.ஏ.எஸ்.களாக இருக்கிறார்கள்?" என்று கேட்கிறார் தலித் இயக்கத்தைச் சேர்ந்த ரமேஷ்நாதன்.

தலித் இடஒதுக்கீட்டில் நிரப்பப்படாமல், ஏராளமான பதவிகள் காலியாக கிடக்கும்போது 'கிரிமிலேயரை'ப் புகுத்த வேண்டிய அவசியம் என்ன? தலித் மக்கள் இடஒதுக்கீட்டைப் பயன்படுத்தி மேல் நோக்கி வளருவதைத் தடைப்படுத்துவதே கிரிமிலேயர் என்றும் அவர் விளக்குகிறார். பொருளாதார அளவுகோல் மாறுபடக் கூடியது; ஆனால் 'ஜாதி' நிலையானது; 1993ஆம் ஆண்டு - ஆண்டு வருமானம் ஒரு இலட்சத்துக்கு மேலே உள்ளவர்கள். இடஒதுக்கீட்டு உரிமைகளைப் பெற முடியாது என்று நிர்ணயிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டில் இது 8 இலட்சமாக உயர்த்தப்பட்டது. வர்க்கப் பாகுபாடுகள் வேறு; ஜாதியப் பாகுபாடுகள் வேறு. வர்க்கப் பின்னணி மாறினாலும் ஜாதிய அடையாளம் கட்டமைத்த சமூகத்தின் நிலை மாறாமல் இருக்கிறது. ஜாதி பிறப்பின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. உண்மையில் பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் தலித் மக்கள் மீதுதான் ஜாதிய ஒடுக்குமுறை அதிகரித்து வருகிறது. ஆணவக் கொலை, உயர்கல்வி நிறுவனங்களில் தற்கொலை, நில உரிமைக்கான போராட்டம், ஜாதி அடிமைத் தொழிலை செய்ய மறுப்பதால் நடக்கும் தாக்குதல் - இப்படி பொருளாதாரத்தில் உயரத் துடிக்கும் தலித் மக்கள் மீதே கூடுதல் தாக்குதல்களும் வன்முறைகளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பொருளாதார மேம்பாடு இவர்களை மேலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும்போது கிரிமிலேயர் பேச முடியுமா?

மற்றொரு முக்கிய கருத்தையும் சுட்டிக் காட்ட வேண்டும். இடஒதுக்கீடு முறைகள் இத்தனை ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப் பட்டு சமூக மேம்பாட்டுக்கான பல திட்டங்கள்

கொண்டு வரப்பட்ட நிலையிலும் உயர்ஜாதி யினருக்கும் தலித் மக்களுக்கும் இடையிலான பொருளாதார இடைவெளி குறையவே இல்லை என்பதை தேசிய மாதிரி கணக்கெடுப்பு ஆய்வுகள் உணர்த்துகின்றன. 1999-2000ஆம் ஆண்டில் கிராமங்களில் மாத செலவினங்களில் ஒரு தலித் குடும்பத்துக்கும் உயர்ஜாதி குடும்பத் துக்குமிடையே 38 சதவீத இடைவெளியிருக் கிறது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு 2011-12இல் நடத்திய கணக்கெடுப்பில் இந்த இடைவெளியில் ஒரு சதவீதம் மட்டுமே குறைந்துள்ளது.

பழங்குடிப் பிரிவினருக்கும் உயர்ஜாதி யினருக்கும் இந்த இடைவெளி 53 சதவீதமாக இருந்து பிறகு 48 சதவீதம் என்ற அளவில் மட்டுமே குறைந்திருக்கிறது.

முன்னாள் அய்.ஏ.எஸ். அதிகாரியும் முன்னாள் திட்டக்குழு உறுப்பினரும் மண்டல் ஆணையத்தில் முக்கியப் பொறுப்பில் பணி யாற்றியவரும் சமூகநீதி ஆய்வாளருமான பி.எஸ்.கிருஷ்ணன், 'கிரிமிலேயர்' என்ற சொல்லாடலே தவறானது என்கிறார்."மண்டல் வழக்கில் சமூக ரீதியாக பிற்படுத்தப்பட்டோர் "சமூக ரீதியாக முன்னேறியவர்" என்றுதான் அடையாளப்படுத்துகிறது. 'கிரிமிலேயர்' என்கிற சொல்லை அந்த வழக்கில் உச்சநீதி மன்றம் பயன்படுத்தவில்லை. பிற்படுத்தப்பட்ட வர் பட்டியலில் முன்னேறிய பிரிவினருக்கான அடையாளம் - பொருளாதார அளவுகோல் அல்ல; அதை சமூகரீதியாகவும் கல்வி ரீதியாகவுமே மதிப்பிட வேண்டும். இதுதான் உச்சநீதிமன்ற தீர்ப்பு. அதே நேரத்தில் பட்டியல் இனப் பிரிவினருக்கான அடையாளம் மிகப் பிற்படுத்தப்பட்ட நிலை அல்ல; வரலாற்று ரீதியாக தீண்டாமைக்கு உட்பட்டவர்கள் என்பதே அவர்களுக்கான அடையாளம். ஒரு தனி மனிதரோ அல்லது அவரது சமூகமோ 'தீண்டப்படாதவர்கள்' என்ற சமுதாயக் கண்ணோட்டத்திலிருந்து விலகி நிற்கிறார்களா என்பதுதான் அடிப்படையான கேள்வி. சமூக பிற்படுத்தப்பட்ட தன்மை என்பதைவிட 'தீண்டாமை' என்பது கொடூரமானது" என்று கூறுகிறார் பி.எஸ். கிருஷ்ணன். இதற்கு உதாரணமாக, அவர் முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சரும் துணை பிரதமர் நிலைக்கு உயர்ந்தவருமான பாபு ஜெகஜீவன்ராமை சுட்டிக் காட்டுகிறார். அவர் உ.பி. முன்னாள் முதல்வர் வேத பண்டிதர் சம்பூர்ணானந்த் சிலையை திறந்து வைத்தவுடன் கங்கை நீரை ஊற்றி சிலையைப் புனிதப்படுத்தினார்கள். பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் துணை பிரதமராகவும் உயர்ந்த பதவியில் இருந்த ஒருவரையே 'தீண்டப் படாதவராக' சமூகம் பார்க்கிறது. பி.எஸ். கிருஷ்ணன் மேலும் கூறுகிறார்: "பட்டியல் மற்றும் பழங்குடி இனப் பிரிவினரைப் பொறுத்த வரையில் முன்னேறிய சமூகத்தினருக்கு சமமாக உயருவதற்கான கொள்கைகளையும் திட்டங் களையும் உருவாக்கி கல்வி, பொருளாதாரம், தொழில் போன்ற துறைகளில் சமத்துவமான நிலையை அடையச் செய்ய வேண்டும். அது வரை சில தனி மனிதர்களை சமூகத்திலிருந்து நீக்கி 'கிரிமிலேயரை'க் கூறி பிரித்துப் பார்ப்பதும், அவர்கள் 'தீண்டாமை' எனும் சமூகப் பார்வையிலிருந்து விடுபட்டு விட்டார்கள் என்பதும் நினைத்துப் பார்க்கவே முடியாத ஒன்று. இந்தக் கருத்து உச்சநீதி மன்றத்தில் அழுத்தமாக வாதாடப்பட வில்லை. எதிர்காலத்திலாவது இந்த அடிப் படையான கருத்தை நீதிமன்றத்தின் பார்வைக் குக் கொண்டு செல்ல வேண்டும்" என்கிறார்.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வந்தவுடன் மத்திய சமூகநலத் துறை அமைச்சருக்கும் பிரதமர் மோடிக்கும் பி.எஸ்.கிருஷ்ணன் கடிதம் எழுதி, அரசியல் சட்டத் திருத்தத்தின் வழியாக இந்த அநீதியை நீக்க வேண்டும் என்று வலி யுறுத்தியுள்ளார். இந்த வழக்கில் கே.கே. வேணு கோபால், துஷர் மேத்தா, இந்திரா ஜெய்சிங், பி.எஸ். பட்வாலியா, தினேஷ் திரிவேதி, சஞ்சய் ஹெக்டே போன்ற வழக்கறிஞர்கள் பதவி உயர்விலும் இடஒதுக்கீடு வேண்டும் என்று வாதிட்டார்கள். தலித் வழக்கறிஞர் எவராவது வாதிட்டார்களா? இந்த வழக்கில் ஈடுபடுத்திக் கொண்டார்களா என்ற கேள்விக்கு தனக்கு தெரிந்த வரை எவரும் இல்லை என்கிறார் தலித் சமூக நீதி மய்யத்தைச் சார்ந்த இரமேஷ் நாதன்.

உலக மயமாக்கல் கொள்கைக்குப் பிறகு அரசுத் துறைகள் தனியார் மயமாகி வருகின்றன. எனவே 'தலித்' பிரிவினருக்கான இடஒதுக்கீடு வாய்ப்புகள் பறிக்கப்பட்டுள்ளன. ஏ, பி மற்றும் சி கிரேடு பதவிகளில் தலித்துகளுக்கு போதிய பிரதிநிதித்துவம் இல்லை. இவற்றை எல்லாம் கவனத்தில் கொள்ளாமல் 'கிரிமிலேயரை' திணிப்பது என்ன நியாயம் என்று கேட்கிறார் நாதன்.

நியாயமான புறக்கணிக்க முடியாத கேள்வி.

**'பிரன்ட்லைன்' அக்.26 இதழில் திவ்யா திரிவேதி கட்டுரை.**
**தமிழில் 'இரா'**





# மக்கள் நலத் திட்டங்களை எதிர்க்கும் 'முதலாளித்துவ பார்ப்பனியம்'

● செ. கார்கி




## இலவசங்களைக் கேலி செய்யும் ஜெயமோகன் - முருகதாசுகள் பன்னாட்டு நிறுவனங்களின் பல இலட்சம் சுருட்டல்களுக்கு என்ன நியாயம் கூறுவார்கள்?

தமிழ்நாட்டில் கொஞ்ச காலமாக திராவிட எதிர்ப்பு பேசும் அமைப்புகள் திட்டமிட்டு இளைஞர்கள் மத்தியில் தமிழக அரசு வறிய மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்கில் கொடுக்கும் பல நலத்திட்டங்களை கொச்சைப்படுத்தும் நோக்கில் அவதூறு பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ளனர். 'சர்கார்' திரைப்படத்தை பார்த்த சில இளைஞர்கள் ஜெயமோகன், முருகதாஸ் போன்ற பார்ப்பன அடிமைகளின் விஷக் கருத்துக்களை உண்மை என்று நம்பி அரசு கொடுத்த கிரைண்டர், மிக்சி, டீவி, லேப்டாப் போன்றவற்றை உடைத்தும் தீக்கிரையாக்கியும் வீடியோ பதிவுகளை வெளியிட்டனர். தமிழக அளவில் பெரும் சர்ச்சையை இந்தத் திரைப்படம் ஏற்படுத்தியது. அந்தப் படம் திரையிடப்பட்ட பல திரையரங்கங்கள் முன் வைக்கப்பட்டிருந்த நடிகர் விஜயின் கட் அவுட்டுகளை அதிமுகவினர் கிழித்தெறிந்தனர். பின்னர் இருவருக்கும் ஏற்பட்ட உடன்பாட்டின் படி சர்கார் படத்தில் இருந்து சர்ச்சைக்குரிய காட்சிகளை நீக்க ஒப்புக்கொண்ட பின் பிரச்சினை ஓய்ந்தது.

ஆனால் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட தவறான எண்ணங்கள் இன்னும் நீங்கிய பாடில்லை. திமுக, அதிமுக என இரண்டு கட்சிகளும் தமிழ்நாட்டை குட்டிச்சுவராக

**பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு பெற்ற அறிஞர் அமர்தியா சென் தமிழ்நாட்டில் மருத்துவம், பொதுவிநியோக திட்டம், சத்துணவு திட்டம் போன்றவை இந்தியாவில் மற்ற மாநிலங்களைவிட எவ்வாறு சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றது என்பதை பட்டியலிட்டு இருக்கின்றார்.**

மாற்றிவிட்டன, இலவசங்களை கொடுத்து மக்களை ஏமாற்றுகின்றனர், தமிழ்நாடு இதனால் மற்ற மாநிலங்களைப் போல் இல்லாமல் பின்தங்கிய நிலையில் உள்ளது. எனவே இதற்கு மாற்றாக எங்களுக்கு ஓட்டு போடுங்கள் என பிஜேபியும், இனவெறி கட்சிகளை சார்ந்த சிலரும் தொடர்ந்து பரப்புரை செய்து வருகின்றார்கள். ஏற்கெனவே பெரிய அளவில் அரசியல் விழிப்புணர்வு இல்லாமல் தக்கை மனிதர்களாக இருக்கும் பெரும்பாலான தமிழக இளைஞர்கள் இந்தப் பொய் பிரச்சாரத்திற்கு எளிதில் இரையாகிவிடுகின்றார்கள். சாமானிய மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்களை இலவசம் என்று கொச்சைப்படுத்தும் இந்தக் கும்பல்கள் பெருமுதலாளிகளுக்கு வழங்கப்படும் லட்சக்கணக்கான கோடி வரிச்சலுகைகள் பற்றி மறந்தும் கூட வாய் திறப்பதில்லை.

பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்க இலவசமாக 24 மணி நேரமும் மின்சாரம், தண்ணீர், சாலைவசதி, நிலம் என அனைத்துமே அரசால் தரப்படு கின்றது.இந்தியாவில் 421 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (Special Economiz Zone (SEZ) உள்ளன. இவற்றில் 38.78 சதவிகித சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மட்டுமே முழுமையாக செயல்படுகின்றன. மற்றவற்றில் முழு செயல்பாடும், உற்பத்தியும் நடைபெறவில்லை. 2006-07 நிதியாண்டில் இருந்து 2012-13ஆம் நிதியாண்டு வரையில் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் மொத்தம் 83,104 கோடி ரூபாய் வரி சலுகைகளாகப் பெற்றுள்ளன. இதில் 55,158 கோடி ரூபாய் வருமான வரி விலக்கு. 27,946 கோடி ரூபாய் மறைமுக வரிச் சலுகைகள் ஆகும். நாடு முழுவதும் சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்காக விவசாயிகளிடம் இருந்து கையகப்படுத்தப்பட்ட 45,635 ஹெக்டேர் நிலத்தில் 28,488 ஹெக்டேர் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்திய அரசின் எந்தச் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப் படாமல் இந்தியாவிற்குள் இருக்கும் ஒரு குட்டி காலனிகளாக இவை செயல்பட்டு வருகின்றன. ஆனால் இப்படி விவசாயிகளிடம் இருந்து அடித்துப் பிடுங்கி பெருமுதலாளிகளுக்கு நிலத்தை இலவசமாக கொடுப்பதைப் பற்றியோ, அவர்களுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வரிச்சலுகைகள் கொடுப்பதை பற்றியெல்லாம் ஜெயமோகன், முருகதாஸ் கும்பல் எப்போதாவது கொதித்தெழுந்து இருக்கின்றதா? இது மட்டுமல்ல கடந்த 2005-2006 ஆம் ஆண்டு தொடங்கி 2013-2014ஆம் ஆண்டு வரை கார்ப்ரேட்டுகளுக்கு இந்திய அரசாங்கம் அளித்த வரிச்சலுகை மட்டும் 36 லட்சம் கோடி ரூபாய் என்று குறிப்படுகின்றார் பத்திரிகையாளர் பி.சாய்நாத்.

மோடி பதவியேற்றதில் இருந்து பல இலட்சக்கணக்காண கோடி ரூபாயை வரிச்சலுகையாக பெருமுதலாளிகளுக்கு வாரி இறைத்திருக்கின்றார். அவரின் நண்பர்களான அதானி, அம்பானி போன்றவர்கள் உலக பணக்காரர்கள் வரிசையில் இடம் பிடித்திருக் கின்றார்கள். நீரவ் மோடி, மல்லையா போன்றவர்கள் இந்திய மக்களின் சேமிப்பு பணம் ஆயிரக்கணக்கான கோடிகளை சுருட்டிக் கொண்டு வெளிநாடுகளுக்கு மோடியின் துணையுடன் தப்பிச் சென்றிருக்கின்றார்கள். மோடி பதவியேற்ற இந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும் ஒரு லட்சம் கோடிகளுக்கு மேல் வங்கி மோசடிகள் நடந்துள்ளன. இந்திய வங்கிகளில் 8.4 லட்சம் ரூபாய் வராக்கடன் நிலுவையில் உள்ளது. இவற்றில் கணிசமானவை மோடியின் நண்பர்கள் பெற்ற கடனாகும். இந்திய மக்கள் உழைத்துச் சேர்த்த இலட்சக் கணக்கான கோடி ரூபாய் பணத்தை வரிச்சலுகை என்ற பெயரிலும், வங்கிக் கடன் என்ற பெயரிலும் அள்ளி கொடுத்து அவர்களை கொழுக்க வைக்கும் இந்திய ஆளும் வர்க்கத்துக்கு எதிராக தனது சுண்டு விரலைக் கூட நீட்ட துப்பில்லாதவர்கள் சாமானிய உழைக்கும் மக்களுக்கு கொடுக்கப்பட்ட சில ஆயிரங்கள் கூட பெருமானமில்லாத பொருட்களைப் பார்த்து வயிறு எரிவதும் அதனால்தான் நாடு நாசமாய் போகின்றது என்று புலம்புவதும் கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும்.

ஒருவேளை இவர்கள் சொல்லும் நலத் திட்டங்களால்தான் தமிழ்நாடு உருப்படாமல்

போய்விட்டது என்றால் இது எல்லாம் கொடுக்காத மாநிலங்கள் சிறப்பான வளர்ச்சியை அல்லாவா பெற்றிருக்க வேண்டும். ஆனால் உண்மை நிலை என்ன?. தமிழ்நாடு இந்தியாவில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அனைத்து வகையிலும் முன்னணி மாநிலமாக அல்லவா உள்ளது. பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு பெற்ற அறிஞர் அமர்தியா சென் தமிழ்நாட்டில் மருத்துவம், பொதுவிநியோக திட்டம், சத்துணவு திட்டம் போன்றவை இந்தியாவில் மற்ற மாநிலங்களை விட எவ்வாறு சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றது என்பதை பட்டியலிட்டு இருக்கின்றார். அவற்றில் இருந்து சிலவற்றை மட்டும் பார்ப்போம்.

“இந்தியாவின் பல பகுதிகளில் பல மருத்துவ அடிப்படைகள் புறந்தள்ளப்படுகின்றன. ஆனால் தமிழ்நாட்டில் அவற்றின் மீது கவனம் செலுத்தப்படுகின்றன. உதாரணமாக நோயை வருமுன் தடுக்கும் நோக்கத்தோடு எடுக்கப்படுகிற பொது சுகாதார நடவடிக்கைகள் மீது நிலைத்த கவனம் செலுத்தப்படுகின்றது. அத்தகையத் தடுப்பு நடவடிக்கைகளின் விளைவுகளில் ஒன்றான குழந்தைத் தடுப்பூசி விகிதம் உயர்வாக உள்ளது. 2005-2006ஆம் ஆண்டில் இந்தியாவின் அனைத்து முக்கிய மாநிலங்களைவிட அதிகமாக தமிழ்நாட்டில் 80 சதவீதத்திற்கு கூடுதலாக குழந்தைகளுக்கு தடுப்பூசிப் போடப்பட்டது. இதைப் போல அரசு மருத்துவமனைகளுக்குக் குறித்த நேரத்தில் இலவச மருத்துகளை வழங்குவதற்காக மருந்துக் குழுமம் (Pharmaceutical corporation) ஒன்றை தமிழ்நாடு ஏற்படுத்தியது; மேலும் கணிணி பதிவுகள் கொண்ட சிறப்பாக மருந்துகளை விநியோகிக்கும் முறையையும் உருவாக்கியது. பிற மாநிலங்கள் பலவற்றில் இதற்கு நேர் எதிரான சூழ்நிலை நிலவுகிறது. அங்கு அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளிடம், மருந்துகளை அருகிலுள்ள தனியார் மருந்து கடைகளில் பெற்றுக்கொள்ளுமாறு மருந்து சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. (அம் மருந்து கடைகளும், மருந்து சீட்டு எழுதிய மருத்துவர்களும் லாபத்தை பங்கு போட்டுக் கொள்வது பொதுவான நடைமுறையாகிப் போனது).”

“தமிழ்நாட்டின் பிற சமூக நலத் திட்டங்கள் பலவற்றிலும் இத்தகைய படைப்பூக்கத்தோடு கூடிய செயல் ஊக்கத்தை காணமுடிகின்றது. உதாரணமாக ஆரம்பப் பள்ளிகளில் அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு. இத்திட்டம் தொடங்கப்பட்ட சமயத்தில் ‘கவர்ச்சித் திட்டம்’ என்று விமர்சிக்கப்பட்டாலும், இதுவே பின்னர் தேசிய மதிய உணவு திட்டத்திற்கான முன்னோடியாக அமைந்தது. இன்று தமிழ்நாட்டில் பள்ளிக் குழந்தைகள், குறிப்பாக அரசுப் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு மட்டுமல்ல, சீருடை, பாடப்புத்தகங்கள், எழுது பொருட்கள் மற்றும் உடல்நலம் பரிசோதனைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.”

“அனைவருக்கும் முழுமையாக சமூக நலன் வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் மீதான தமிழ்நாட்டின் உறுதிப்பாடு அதன் அனுபவத்தில் காணப்படும் மற்றொரு முக்கியமான அம்சமாகும். இதற்கு மிகச் சரியான உதாரணமாக அதன் பொது விநியோக முறையைச் சொல்லலாம். இன்று தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு மாதமும் இலவசமாக குறைந்தபட்சம் 20 கிலோ அரிசியும் மானிய விலையில் பருப்பு போன்ற உணவுப் பொருட்களும் வழங்கப்படுகின்றன. 1977இல் பொது விநியோக முறையை குறிப்பிட்ட குடும்பங்களுக்கு மட்டும் என்று வரையறுக்க முயற்சித்த போது தொடர்ச்சியாக பல போராட்டங்கள் எழுந்தன. அதன் காரணமாக அம்முயற்சி ஒரே வாரத்தில் கைவிடப்பட்டது. பொது மருத்துவம், மதிய உணவு, குழந்தை பராமரிப்பு, வேலை வாய்ப்பு உத்திரவாதம், பொது போக்குவரத்து மற்றும் குடிநீர், மின்வசதி, போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஆகிய அனைத்திலும் ‘அனைவருக்கும்’ (வழங்குவது) என்ற கொள்கை நடைமுறையாகிறது.”

“பொது சேவைகளை அனைவருக்கும் சிறப்பாக வழங்வதற்கான உறுதிப்பாட்டை தமிழ்நாடு எப்போது எப்படிப் பெற்றது என்ற கேள்வி எழுகிறது. 1920இல் பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கம் உள்ளிட்ட பல முன்னோடி சமூக மாற்றங்கள், பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சாதிகள் பெற்றுள்ள அரசியல் அதிகாரம், கவர்ச்சிகர அரசியலின் பிடிமானம் மற்றும் தமிழ் சமூகத்தில் ஆக்கப்பூர்வமான பெண் அமைப்புகள் என்று இக்கேள்விக்கு பலதரப்பட்ட விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவையோடு, தமிழ்நாட்டு சமூக

வரலாற்றின் பிற அம்சங்கள் மற்றும் தமிழ்நாட்டின் சமகால சாதனை களோடு இவற்றிற்குள்ள தொடர்பு ஆகிய அனைத்தும் ஆய்வுக்குரியவை. விளக்கங்கள் பலதரப்பட்டவையாக இருப்பினும் அவை யாவும் ஏதோ ஒரு வகையில் ஜனநாயக இயக்கத்தின் வலிமையை உணர்த்துவதில் ஒன்றுபடுகின்றன." (ஆதாரம்: நிச்சயமற்ற பெருமை- இந்தியாவும் அதன் முரண்பாடுகளும்: ஜீன் டிரீஸ், அமர்த்தியா சென்).

இன்று இந்தியாவில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் ஓரளவு சிறப்பான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது என்றால் அது எல்லாம் ஏதோ ஒரே இரவில் நடந்த அதிசயமல்ல. இதற்காக ஒவ்வொரு ஆட்சியிலும் பல நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. நீதிக்கட்சி தலைவர் பிட்டி தியாகராயர் சென்னை மாநகர மேயராக இருந்த போதே மதிய உணவுத்திட்டம் கொண்டு வரப்பட்டது. அது காமராஜர் காலத்தில் விரிவு படுத்தப்பட்டு, எம்.ஜி. ஆர் ஆட்சி காலத்தில் மேம்படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டமானது. மதிய உணவோடு வாரம் முழுவதும் முட்டைகள் அளிக்கும் திட்டத்தை கலைஞர் கொண்டு வந்தார். இதனால் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தின் கல்விச்சூழல் மேம்பட்டது.

தமிழ்நாட்டை ஆண்ட திமுகவாக இருக்கட்டும், அதிமுகவாக இருக்கட்டும் இந்த இரண்டு கட்சிகளும் மக்களை பசியில் இருந்து விடுவிக்க தம்மால் ஆன அனைத்து முயற்சியையும் செய்தார்கள் என்பதை மறுக்க முடியாது. 1967-ல் ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்று தொடங்கப்பட்டது இன்று வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பத்திற்கு இலவசமாக 20 கிலோ அரிசி தரும் நிலைக்கு வந்திருக்கின்றது. இது தவிர மாநிலம் முழுவதும் செயல்படும் 200க்கும் மேற்பட்ட அம்மா உணவகங்கள் இந்தியாவில் மற்ற மாநிலங்களில் இல்லாத வகையில் ஐந்து ரூபாய் இருந்தால் கூட வயிறு நிறைய உண்ண முடியும் என்ற நிலையை ஏற்படுத்தி இருக்கின்றது. தற்போது தமிழகத்தில் 'அம்மா உணவகம்' போன்று ஆந்திர மாநிலத்திலும் "அண்ணா அம்ருத ஹஸ்தம்" என்ற பெயரில் செயல்படுத்தப்படுகின்றது. இவை எல்லாம் ஏதோ அரசு மக்களுக்கு இலவசமாக கொடுக்கின்றது என்று கொச்சைப் படுத்திவிட முடியாது. இவை அனைத்தும் அந்த மக்களின் வரிப்பணத்தில் இருந்தே கொடுக்கப்படுகின்றன. கோடிக்கணக்கான சாமானிய மக்களை ஓட்டுவங்கியாக கொண்டிருக்கும் இக்கட்சிகள் இது போன்ற திட்டங்கள் மூலம் அவர்களின் பொருளாதார சுமையை ஓரளவு குறைத்திருக்கின்றார்கள்.

கலைஞர் கொண்டுவந்த விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம், நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் போன்றவை மற்ற மாநிலங்களைக் காட்டிலும் குறைந்த பட்சமாகவாவது விவசாயிகள் மற்றும் நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவியிருக்கின்றது. மேலும் கலைஞரால் கொண்டுவரப்பட்ட வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி திட்டம் , ஜெயலலிதா அவர்களால் கொண்டுவரப்பட்ட விலையில்லா கிரைண்டர், மிக்சி, ஃபேன் கிராமப்புறப் பெண்களுக்குக் கால்நடைகள் வழங்கும் திட்டம் போன்றவை கிராமப் புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பயன்பட்டிருக்கின்றன. இவை எல்லாமே மக்களின் வரிப்பணத்தில் இருந்து அரசு கொடுத்ததுதானே ஒழிய யாரும் அவர்களின் கைக்காசில் இருந்து கொடுத்தது அல்ல. இருப்பினும் இந்தியாவில் மற்ற மாநிலத்தை ஆண்ட கட்சிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழகத்தை ஆண்ட திமுக, அதிமுக என இரண்டுமே தமிழகத்தில் வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்திருக்கின்றன.

தமிழ்நாடு மட்டும் ஒரு தனி நாடாக இருந்திருந்தால் நிச்சயம் உலகில் சிறந்த பொருளாதரா வளர்ச்சி பெற்ற நாடாக ஆகி இருக்கும் என்று உறுதியாக சொல்ல முடியும். இந்திய அரசின் ஆதிக்கப் பிடியில் சிக்கி, அதன் பொருளாதாரக் கொள்கை, அதிகார முறை கேடுகளுக்கிடையில்தான் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகம் வளர்ந்திருக்கின்றது. சமூக நீதி கொள்கையில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. யாரெல்லாம் பார்ப்பனியத்தை ஏற்றுக் கொண்டிருகின்றார்களோ அவர்கள் எல்லாம் முதலாளித்துவ அடிவருடிகளாகத் தான் இருப்பார்கள். ஜெயமோகன், முருகதாஸ் போன்றவர்கள் பாப்பனியத்தை ஏற்றுகொண்ட முதலாளித்துவ அடிவருடிகள் என்பதை நாம் புரிந்துகொண்டால் இவர்கள் முன்வைக்கும் அரசியல் என்பது பார்ப்பனிய-முதலாளித்துவ அரசியல் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். ●

# நேர்மைக்கு ஓர் இலக்கணம்



**பெரியாரின் நேர்மையே அவரது கொள்கைக்கு வலிமையான ஆயுதமாக இருந்திருக்கிறது.**

*பெரியார் என்கிற மனிதர் சாதாரணமான மக்களுக்கு கடவுள் மறுப்பாளராகவும் பாசிசவாதிகளுக்கு எதிரியாகவும், ஒடுக்கப்பட்ட பெரும்பான்மை மக்களுக்கு போற்றத்தக்க தலைவராகவும் விளங்குகிறார் என்று சொன்னால் அவருடைய பொது வாழ்வில் அவர் பின்பற்றிய நேர்மை முக்கிய பங்காற்றுகிறது. அவருடைய வாழ்வு நீண்டது. அவர் நடத்திய போராட்டங்களின் எண்ணிக்கையும் நீண்டது. அதன் மூலம் மக்கள் பெற்ற நன்மைகளின் பட்டியலும் நீண்டது. அவரது வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தது அவருடைய மனித நேயமும் பொது வாழ்க்கையில் அவர் கடைபிடித்த நேர்மையுமே ஆகும். தந்தை பெரியார் தன்னுடைய வாழ்க்கையில் எப்போதும் யாரிடமும் நல்ல பெயர் எடுக்கவேண்டும் என்றோ அல்லது தன்னைக் குறித்து மற்றவர்கள் பெருமையாகப் பேசவேண்டும் என்றோ விரும்பியவரல்ல.*

ஒருமுறை வ.உ.சி.யும் பெரியாரும் ஒரே மேடையில் பேச நேர்ந்தபோது வ.உ.சி பெரியாரை தன் தலைவர் என்று பேசினார். இறுதியாக பேசிய பெரியார், வ.உ.சி பேசும்போது என்னை அவருடைய தலைவர் என்று குறிப்பிட்டார். மன்னிக்க வேண்டும் அவருக்கு தலைவராக இருக்கக் கூடிய தகுதி எனக்கில்லை ஏனெனில் ஐயா அவர்கள் சுதந்திரத்திற்காக சொத்தை இழந்து சிறைக்குச் சென்று செக்கிழுத்த நேரத்தில் நான் மைனராய் திரிந்தவன். ஆகவே அவர் தான் எனக்கு தலைவரேயொழிய நான் அவருக்கு தலைவர் இல்லை என்று பேசினார். அவருடைய நேர்மைக்கும் துணிவிற்கும் இதைவிட வேறு சேதி தேவையில்லை என்பதற்கு அவரது வாழ்க்கைப் பாதை யிலிருந்து சில நிகழ்வுகளை சுட்டிக் காட்டலாம்.

இந்நிகழ்ச்சி 1903ஆம் ஆண்டு பெரியார் அவர்களின் 24ஆம் வயதில் நடந்த நிகழ்ச்சியாகும் அப்போது தந்தைக்கு உதவியாக வணிகத்துறையில் ஈடுபட்டிருந்தார் ஒருவரிடம் இருந்து வரவேண்டிய ஓராயிரம்

ரூபாய்க்கான வழக்கிற்கு, வக்காலத்து நமூனாவில் தமது தந்தையார் பெயரை தாமே கையெழுத்துப் போட்டு ஒரு வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டு, இவர் ஈரோடு திரும்பி விட்டார். வழக்கறிஞர் ஆத்திரப்பட்டுத், தந்தை கையெழுத்தை மகன் ஃபோர்ஜரி செய்து மோசடி செய்துவிட்டதாக ஒரு வழக்கு தொடுத்துவிட்டார். வெங்கட்ட நாயக்கர் பயந்து போய் தன்னுடைய பெயருக்கு களங்கம் விளையுமே என அஞ்சி, சேலம் விஜயராகவாச்சாரியார், சென்னை நார்ட்டன் துரை போன்ற மிகப் பிரபலமான வழக்கறிஞர்களின் உதவியை நாடினார். தான் இந்த கையெழுத்தைப் போடவில்லை என்று இராமசாமி சொல்லிவிட்டால், தப்பித்துக் கொள்ளலாம்; அது ஒன்றுதான் வழி என்று அவர்கள் ஆலோசனை கூறினர்!

ஆனால் ஈ.வெ.இராமசாமி, பிடிவாத மாக பொய் கூற மறுத்து, வருவது வரட்டுமெனச் சிறை வாழ்க்கைக்கு ஒத்திகை பார்க்கத் தொடங்கிவிட்டார். அதாவது தன் காப்பு, கொலுசு, கடுக்கன் முதலிய நகைகளைக் கழற்றி விட்டுச் சவரம் செய்து கொள்ளாமல் கேழ்வரகுக் களி சாப்பிட்டு தலையணை இல்லாமல் வெறும் பாயில் படுத்து பழகிவந்தார். இரண்டு மாதங்கள் கழித்து திருச்சி உதவி கலெக்டரான ஆங்கிலேய இளைஞர் ஒருவர் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது. பிரபல வியாபாரியானதால், வழக்கு விசாரணையை வேடிக்கை பார்க்க, நீதிமன்றத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. அரசு வழக்கறிஞரான கணபதி ஐயர், கலெக்டரிடம் அனுமதி பெற்று ஈ.வெ.இராமசாமிக்காக வழக்காட வருகிறார். உதவி கலெக்டர் கணபதி ஐயரிடம் விவரம் கேட்கிறார்.

பின்னர் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் இராமசாமியையும் கேட்கிறார். தகப்பனாருக் காகத் தானே வியாபார விஷயங்களை கவனிப்பதால் வயதான அவருக்காக தானே கையெழுத்து போட்டதாக ஒத்துக் கொள்கிறார். மகன் உண்மையைச் சொன்னவுடன் வெங்கட்ட நாயக்கரும் அச்சத்துடன் ஆமோதிக்கிறார். ஆனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. காரணம் இவ்விஷயத்தில் இராமசாமி யாரையும் மோசடி செய்யும் நோக்கத்தோடு இந்த கையெழுத்தைப் போடவில்லை என்பதோடு தான் செய்ததை அவர் ஒப்புக் கொண்டார் என்பதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்வதாக கலெக்டர் அறிவித்தார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் தான் தப்பிச் செல்ல வாய்ப்பு இருந்தும் செல்வாக்கு இருந்தும் தான் செய்த தவறை ஒத்துக் கொண்டு அதற்குரிய தண்டனை அனுபவிக்க தயாராக இருந்தாரேயொழிய ஒருபோதும் ஏமாற்ற அவர் தயாராக இல்லை. இது பெரியார் பொது வாழ்க்கைக்கு வருவதற்கு முன்னால் நிகழ்ந்த சம்பவமாகும்.

**ஒத்துழையாமை இயக்கத்தில்...**

அரசியலுக்கு வருவது என்று சொன்னாலே பெரும்பாலானோர் தனக்கு என்ன பதவி கிடைக்கும். என்று கேட்டுத் தான் வருவார்கள் அல்லது வந்தபிறகு பதவிக்காக காத்துக் கொண்டிருப்பார்கள். தான் வகித்த 29 பதவிகளையும் ராஜினாமா செய்துவிட்டு பொது வாழ்க்கைக்கு வந்த ஒரே தலைவர் பெரியார் மட்டுமே ஆவார். காரணம் காங்கிரஸ் அப்போது ஒத்துழையாமை இயக்கத்தை நடத்திக் கொண்டிருந்தது.

கள்ளுக்கு குத்தகைவிட்ட தனக்கு சொந்தமான 500 தென்னைமரங்களை குத்தகை எடுத்தவருக்கு இழப்பீடு கொடுத்துவிட்டு வெட்டி சாய்த்தார். பட்டு போன்ற பகட்டான உடைகளையெல்லாம் உதறிவிட்டு கதர் அணிந்தார். தானே தெருவில் நடந்து கூவி கூவி கதர் விற்றதோடு தன் குடும்பத்தாரையும் கதர் அணியச் செய்தார். அப்போது தான் தன் குடும்பத்திற்கு வரவேண்டிய 50,000 ரூபாயையும் இழந்தார்.

நீதிமன்றங்களை விலக்க வேண்டும் என்று காந்தி கூறியதை செயலில் காட்டிய தலைவரும் அவர்தான். அவரிடம் 28 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு அடமானப் பத்திரம் இருந்தது. ஒத்துழையாமை இயக்கத்துக்காக பெரியார் அதை வசூலிக்க விரும்பவில்லை காங்கிரஸ்

தலைவராக இருந்த சேலம் சி.விஜயராகவாச்சாரியார் இதையறிந் தார். இந்த பத்திரத் தொகைக்காக வசூல் செய்ய உனக்கு இஷ்டமில்லையானால் நீர் அதை எனக்கு மேட்ஓவர் செய்து கொடுத்தால் இனாமாகவே வாதாடி பணம் வசூலித்து தருகிறேன். அந்த பணத்தை அடைய உனக்கு இஷ்டமில்லையானால் அதை திலகர் சுயராஜ்ய நிதிக்காவது கொடுத்து விடும். என்று ஈ.வெ.ராவிடம் வலியுறுத்திக் கேட்டார். அவர் ஏற்கவில்லை அவ்வளவு பெரிய தொகையை மனதார இழந்தார்.

நானே வழக்காடுவதும் ஒன்று தான். உங்களிடம் எழுதிக் கொடுத்து வழக்காடச் செய்வதும் ஒன்று தான். இது என் கொள்கைக்கு உடன்பாடானது அல்ல. கொள்கையைவிட பணம் பெரிதல்ல என்ற முடிவுக்கு வந்தார். பெரியார், 28,000 ரூபாயை வேண்டாம் என்று கூறிய காலத்தில் ஒரு பவுன் விலை 7 ரூபாய்.

**பெரியாரின் பெண் விடுதலை :**

எந்த சீர்திருத்தத்தையுமே தன்னிட மிருந்தும் தன் குடும்பத்தினரிடமிருந்தும் ஆரம்பித்தவர் பெரியார். அவருடைய பெண் விடுதலை கருத்துகளும் அப்படியே. விதவை மறுமணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று 1929 செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றினார். அதற்கு பல வருடங்கள் முன்பே விதவையான தன் தங்கை மகளுக்கு வீட்டில் யாருக்கும் தெரியாமல் திருமணம் செய்து வைத்தார்.

பொது வாழ்க்கையில் பெண்கள் பங்கேற்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் தன் வீட்டில் உள்ள பெண்களை போராட்டங்களில் ஈடுபடுத்தினார். சுயமரியாதைத் திருமணங்களை நடத்தி வைக்கும் அளவுக்கு தயார் செய்தார்.

பிரிட்டிஷ் அரசு காந்தியிடம் கள்ளுக்கடை போராட்டத்தைக் கைவிட வலியுறுத்திய போது அது என்னிடம் இல்லை ஈரோட்டில் உள்ள இருபெண்களிடம் (நாகம்மை, கண்ணம்மா ) தான் இருக்கிறது என்று காந்தியே சொன்னார். பெண்கள் எப்படி இருக்கவேண்டும் என்று மேடைகளில் கர்ஜித்தாரோ அதே போல் தன் வீட்டுப் பெண்களை மாற்றிக் காட்டினார். தான் தொடங்கிய குடிஅரசு பத்திரிக்கையின் பதிப்பாளராக தங்கை கண்ணம்மாவையே நியமித்திருந்தார். அதனால் தான் ‘இன்றைய ஆட்சி முறை ஏன் ஒழிய வேண்டும்’ என்கிற கட்டுரை வெளிவந்தபோது பதிப்பாளர் என்கிற முறையில் கண்ணம்மா அவர்கள் சிறை சென்றார். இன்னொரு முக்கிய சிறப்பு இந்தியாவின் முதல் பெண் பத்திரிகைப் பதிப்பாளர் தோழர் கண்ணம்மா தான் ஆனால் வரலாற்றில் அது எங்கும் பதிவாகவே இல்லை என்பது தனி சோகம்.

**காந்திக்கு கொடுத்த வாக்கு :**

1927 ஆம் ஆண்டு காந்தியின் அழைப்பின் பேரில் பெரியார் எஸ்.ராமநாதன் அவர் களுடன் காந்தியை (பெங்களூரில் மகாராஜா வின் விருந்தினராய் தங்கியிருந்தபோது) சந்தித்தார். அங்கு காந்தியும் பெரியாரும் தீண்டாமை ஒழிப்பு குறித்தும் இந்துமதம் குறித்தும் வர்ணாசிரம் மற்றும் பார்ப்பன ஆதிக்கம் குறித்தும் காரசாரமாக உரையாடல் நிகழ்த்தி யுள்ளனர். இதன் ஒரு பகுதியை மட்டும் (6.3.1927) குடிஅரசு இதழில் பெரியார் வெளியிட்டார். இதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் காந்தியை ஆதரித்தும் பெரியாரை எதிர்த்தும் எதிர்ப்புகள் கடிதங்களாக வந்து கொண்டே யிருந்தன. உண்மையில் அன்று நடைபெற்ற முழு உரையாடலையும் வெளியிட்டிருந்தால் நிச்சயம் பெரியாருக்கு அவ்வளவு எதிர்ப்புகள் வந்திருக்காது. தன்னுடைய ஒப்புதலின்றி முழு உரையாடலையும் வெளியிடக் கூடாது என்று காந்தியார் விதித்த நிபந்தனையை பெரியார் ஒப்புக் கொண்டதால், முழு உரையாடலையும் வெளியிடாமல் தவிர்த்து விட்டார்.

இறுதியாக விடுதலையில் (18.2.1948) குத்தூசி குருசாமி அவர்கள் காந்தியாருடன் பெரியார் ஈ.வெ.ரா., எஸ். இராமநாதன் சந்திப்பு என்கிற தலைப்பில் அந்த முழு உரையாடலையும் காந்தி மரணத்துக்குப் பிறகு வெளியிட்டார்.

பெரியார் தான் கொடுத்த வாக்கை மீறாமல் நேர்மையாக காந்தியார் சாகும் வரை அந்த உரையாடலை வெளியிடவேயில்லை.

**பெரியாரும் – ராஜாஜியும்**

தன் வாழ்நாள் அரசியல் எதிரி ராஜாஜிக்கு கூட அவர் உண்மையாக இருந்தார். மணியம்மையாரை பெரியார் இரண்டாவது திருமணம் செய்வதைக் காரணமாகக் கூறி திராவிடர் கழகத்தில் இருந்து அண்ணா விலகினார். அதில் முக்கியமாக ராஜாஜியின் ஆலோசனையின் படி தான் அவர் திருமணம் செய்து கொண்டார் என்றும் பெரியார் - ராஜாஜி சந்திப்பை அதற்கு ஆதாரமாகவும் சொன்னார்கள். உண்மையில் அப்போது என்ன நடந்தது என்றால் கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜகோபாலாச்சாரியார் திருவண்ணாமலைக்கு தனி இரயிலில் வந்தபோது தந்தை பெரியார் அவரை சந்தித்துப் பேசினார். ராஜாஜி - பெரியார் என்ன பேசினார்கள் என்பது பற்றி பெரிய சர்ச்சை கிளப்பப்பட்டது. மணியம்மையாரை திருமணம் செய்யும்படி இராஜாஜி தான் யோசனை சொன்னார் என்று பேசப்பட்டது.

ஆனால் உண்மை அதுவல்ல. மணியம்மையார் திருமணத்தை ராஜாஜி எதிர்த்து பெரியாருக்கு கடிதம் எழுதினார் என்பதுதான் உண்மை. இயக்கத்தை உடைப்பதற்கு ராஜாஜி திட்டமிட்டு பெரியாருக்கு தவறான யோசனை கூறி விட்டார் என்றும் ஆரியத்தின் ஆலோசனை கேட்டு பெரியார் நடக்க ஆரம்பித்து விட்டார் என்றும் அவதூறு சேறு வீசப்பட்டது.

பெரியார் நினைத்திருந்தால் இராஜாஜி தனக்கு எழுதிய கடிதம் மூலம் அவர் அப்படி கூறவில்லை என்று அன்றே நிரூபித்திருக்க முடியும். ஆனாலும் ராஜாஜி அந்தரங்கம் என்று எழுதிய அந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததால் தன் மூச்சு அடங்கும் வரை மதித்து அதை அந்தரங்கமாகவே வைத்திருந்த தலைவர் பெரியார். அவர் இறந்தபிறகு மணியம்மையார் கைக்கு அந்த கடிதம் கிடைக்கும் வரை யாருக்குமே தெரியாது. இந்தத் திருமணம் செய்வதை வேண்டாம் என்று கூறியே இராஜாஜி அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தார்.

வீட்டில் ராமனாக இருந்தபோதும் சரி தொழிலில் இராமசாமி நாயக்கராக இருந்த போதும் சரி பொது வாழ்வில் தந்தை பெரியாராக இருந்தபோதும் சரி நேர்மை என்ற சொல்லுக்கு இலக்கணமாய் வாழ்ந்த தலைவர் அவர்.


**– பெரியார் யுவராஜ்**

**ஆதார நூல்கள்:**
‘விடுதலை’ (18.2.1948), ‘குடிஅரசு’
தமிழர் தலைவர்
கவிஞர் கருணானந்தம் எழுதிய
‘தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு’
தோழர் வளர்மதி எழுதிய
‘சுயமரியாதைப் போராட்ட வரலாறு’

## அனுமதி பெறாத சர்ச்சுகளை இழுத்து மூடியது சீனா

*கடவுள் மதமறுப்பு நாத்திகக் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ள சீன நாடு, கட்டுப்பாடற்ற மத நடவடிக்கைகளுக்கு கடிவாளம் போட்டு வருகிறது. குறிப்பாக கிறிஸ்தவ சர்ச்சுகள், அரசு அங்கீகாரம் பெற்றவையாக இருக்க வேண்டும். அத்தகைய சர்ச்சுகளில் மட்டுமே வழிபாடுகள் நடத்தப்பட வேண்டும். இந்த விதிமுறைகளை மீறி ஆங்காங்கே வீடுகளுக்கு கீழேயும் பொதுவிடங்களிலும் ‘சர்ச்’சுகளை நிறுவி வழிபாடுகள் நடத்தப்பட்டு வந்தன. பெய்ஜிங் உள்ளிட்ட பல்வேறு பிராந்தியங்களில் உரிய அனுமதி இன்றி நடத்தப்பட்ட இந்த சர்ச்சுகளை சீன அதிகாரிகள் சோதனையிட்டு இழுத்து மூடினர். அமெரிக்காவைச் சார்ந்த பாப்ஃபூ என்ற பாதிரியார், “சீனா மத உரிமைகளைப் பறிக்கிறது; வழிபாட்டு இடங்களை அவமதிக்கிறது; சர்வதேச சமூகம் இதைக் கண்டிக்க வேண்டும்” என்று அறிக்கை விடுத்துள்ளார். “அரசின் நாத்திகக் கொள்கைகளை சீர்குலைக்கும் கட்டுப்பாடற்ற மதப்பிரச்சாரத்தை சீனா அனுமதிக்காது” என அரசு அறிவித்துள்ளது. ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ (செப்.17, 2018) இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.*

# வாசகர்களிடமிருந்து...




'எழுத்தில் வராத வரலாறுகள் – களப்பணியாளர்களின் வாய்மொழியாக பதிவு செய்யப்படும்போது இயக்கச் செயல்பாடுகளையும் தோழர்களின் உணர்வுகளை யும் உணர முடிகிறது. 14 வயதில் பெரியாரிடம் வந்து 23ஆவது வயதில் அரசுப் பணியில் சேர்ந்து ஓய்வுக்குப் பிறகு சைவ சித்தாந்தத்தில் ஈடுபட்ட நிலையிலும் தன்னை ஆட்கொண்ட தலைவர் பெரியார்தான் என்று கூறும் மா.கோபாலின் வாய்மொழி வரலாறு மெய்சிலிர்க்க வைத்தது. அன்று சென்னையில் திராவிடர் கழகம் எப்படி செயல்பட்டது; கூட்டங்கள் எப்படி நடத்தப்பட்டன என்ற வரலாறுகளை இளைய தலைமுறைக்கு உணர்த்தியது, இந்த வாய்மொழி வரலாறு.

**– மணி, திருச்சி**

'பிரம்மத்தைப் பார்த்த பிரமாணன் உண்டா?' என்ற புத்தர் இயக்கம் பற்றிய கட்டுரை பல தகவல்களை அறிய உதவியது. முடிதிருத்தும் நாவிதர் சமூகத்தைச் சார்ந்த உபாலி – பவுத்த சங்கத்தில் புத்தருக்கு அடுத்த இடத்தில் உயர்த்தப்பட்டதோடு பவுத்த நூலான திரிபிடகத்தைப் படித்து மற்றவர்களுக்கு விளக்கக்கூடிய நிலையிலும் இருந்திருக்கிறார் என்பது அந்த காலத்தில் புத்தர் செய்த பெரும் புரட்சி.

புத்தர் மார்க்கத்தை அவரது சீடர்கள் ஊர் ஊராகப் பரப்பினார்கள். புத்தரும் ஊர் ஊராகச் சென்றார். பெரியாரும் தமிழ்நாடு முழுதும் சுற்றிச் சுற்றி மக்களிடம் பேசினார். மக்களை நேரடியாக சந்தித்து அவர்களிடம் சிந்தனை மாற்றத்தை உருவாக்கும் கருத்துப் புரட்சி மிகவும் வலிமையானது. புத்தருக்குப் பிறகு மக்களை சந்தித்து அவர்களின் இதயங்களோடு உரையாடிய தலைவர் பெரியார் மட்டுமே! புத்தர் – பார்ப்பனர்களை புத்த மார்க்கத்தில் இணைத்ததால் ஊடுருவி அழித்து விட்டனர். இந்த வரலாற்றிலிருந்து பெரியார் கற்ற பாடம்தான் பார்ப்பனர்களை திராவிடர் கழகத்தில் சேர்க்காமல் தடுத்தது. புத்த மார்க்கத்தையும் பெரியார் இயக்கத்தையும் ஒப்பீடு செய்யும் ஆய்வுகள் இன்னும் வர வேண்டும். பார்ப்பனிய எதிர்ப்புப் புரட்சிக்கு அவை நிச்சயம் வலிமை சேர்க்கும்.

**– சரவணன், காஞ்சிபுரம்**

கிராமங்களில் பெருமைகளைப் பேசிக் கொண்டிருப்பவர்கள் அங்கே நடக்கும் ஜாதிய ஒடுக்குமுறைகளைக் கவனத்தில் கொள்வது இல்லை. 'ஜாதியமைப்பின் கொடூர வடிவம் கிராமங்கள் தான்' என்ற மனுஷ்ய புத்திரனின் உரையை 'நிமிர்வோம்' வெளியிட்டதற்காகப் பாராட்ட வேண்டும். நகரங்கள் 'பிராமண'த்தன்மையிலும் கிராமங்கள் சூத்திரத் தன்மையிலும் இருக்கிறது என்று கூறிய பெரியார், கிராமங்களே ஒழிய வேண்டும் என்று கூறினார். எவன் ஒருவன் சுய மத மறுப்பாளனாக, சுய ஜாதி மறுப்பாளனாக இல்லையோ அவன் பேசுகிற அனைத்து அறங்களும் அறிவியலும் போலித்தனமானது என்று மனுஷ்ய புத்திரன் கூறியிருப்பது மிகச் சிறப்பான கருத்து.

**– பாஸ்கர், வேலூர்**

மரணத்தை சந்திப்பதற்கு 39 நாட்களுக்கு முன்பு, 'இந்த சமுதாயத்தின் சூத்திர இழிவு ஒழிப்புக்காக நான் பலிகடாவாகிறேன்' என்ற பெரியார் பேச்சை 'நிமிர்வோம்' இதழில் படித்தபோது கண்ணீர் வந்து விட்டது. ''தமிழன் யோக்கியதை எனக்குத் தெரியும்; 75 வருடமாய் தெரியும்; தமிழனுக்காக நான் பலிகடாவாகிறேன்; மானமுள்ளவர்கள் வாருங்கள்; முடியாத யோக்கியர்கள், யோக்கியர்களுக்குப் பிறந்தவர்கள் வாலை அடக்கிக் கொண்டு யோக்கியமாய் வாழுங்கள்'' என்று பேசக்கூடிய துணிவும் நேர்மையும் பெரியாருக்கு மட்டுமே உண்டு.

**– பிரபாகரன், திருப்பூர்**

# நான் நரகாசுரன்...

நடப்பவைகளை சகித்துக் கொள்ளாதபோது
நான் நரகாசுரன்

எங்கிருந்தோ வரும் தேவர்கள் எங்கள் கதிராமங்கலத்தில்
துளையிடுவதை எதிர்த்துக் கேட்டால்
நான் நரகாசுரன்.

மூலதன கூர்மாவதாரங்கள் எனது நெடுவாசலைப் பாயாய் சுருட்டிக் கொண்டு
ஓட வருகையில், வீதிக்கு வந்து விரட்டினால்
நான் நரகாசுரன்.

தமிழகத்தையே மத்தாக்கி கெயில் ஆதிசேஷன் இறுக்குகையில் -
அமிர்தம் மேல் லோகத்திற்கு, விஷம் எங்களுக்கா?
என ஆர்த்தெழுந்துப் போராடினால்
நான் நரகாசுரன்.

பசுந்தளிர் அகலிகையை அபகரிக்க 'மேக் இன் இந்தியா' மாறுவேடத்தில் வரும்
பன்னாட்டு இந்திரனைத் தடுத்து நிறுத்தினால்
நான் நரகாசுரன்.

அழகிய தாமிரவருணியை ஆக்கிரமிக்க வரும் அமெரிக்க பிரகஸ்பதியை -
என்னைக் கொன்றுவிட்டு தீபாவளி, என் ஆற்றைக் கொன்றுவிட்டு
கொக்கோகோலாவா? என எதிர்த்துக் கேட்டால்
நான் நரகாசுரன்

வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர்மெய், அணியாய்,
இலக்கணமாய் இலக்கியமாய் என் குருதி கலந்த
தாய்த்தமிழை ஆதிக்கம் செய்ய வரும் சமஸ்கிருதத்தை அடித்துத் துரத்தினால்
நான் நரகாசுரன்.

கருவறைக்குள் வந்தால் தீட்டு, கல்வி பயில வந்தால் நீட்டு,
பூர்வகுடி உரிமைகளுக்குப் பூட்டு என்ன அநியாயம்?

இந்த அரசுக் கட்டமைப்பை ஓட்டு - என தெளிந்து நின்றால்
நான் நரகாசுரன்

– **சவுரி,** பெங்களூர்

Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29, New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN